பக்கங்கள்: பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 08 செவ்வாய்க்கிழமை (20-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:147

## அன்னை பூபதி நினைவுதினம் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

தியாக தீபம் அன்னை பூபதியின் 16 ஆவது நினைவுதினம் வடக்கு - கிழக்கின் தமிழ்ப்பகுதிகள் எங்கும் அடையாள உண்ணா விரதங்களுடனும் பிற நிகழ்ச்சிகளுடனும் உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கேணல் கிட்டு பூங்காவிலும் -

வடமராட்சியில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய முன்றிலிலும் -

தீவகத்தில் துறையூர் ஐயனார் சனசமூக நிலையம், ஊர்காவற்றுறை திறந்தவெளியரங்கு ஆகிய இடங்களிலும் -

தென்மராட்சியில் சங்கத்தானை முருக மூர்த்தி ஆலய மூன்றிலிலும் - உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் எனப் பெரும் எண்ணிக்கையினர் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

தமிழீழத் தேசியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வுகளில் 3 மணிக்கு உண்ணாவிரதம், நீராகாரம் வழங்கி முடித்துவைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பொதுக்

(14ஆம் பக்கம் பார்க்க)



தியாகச் சுடர் அன்னை பூபதியின் 16 ஆவது நினைவுதின நிகழ்வு கேணல் கிட்டு பூங்காவில் நேற்று இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தேசியக்கொடி ஏற்றுவதையும், மேஜர் நிரஞ்சனின் தந்தை க.தம்பிராசா அன்னையின் திருவுருவப்படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றுவதையும், மலரஞ்சலி செலுத்தப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டு அடையாள உண்ணாவிரதத்தில் பங்கேற்ற பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

### கிளிநொச்சியில் இன்று முற்பகல்

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை தலைவர் பிரபாகரன் சந்திக்கின்றார்!

## சந்திரசேகரன், மனோ கணேசனும் பங்குபற்றுவர்

கிளிநொச்சி,ஏப்ரல்20

**கடந்த பொதுத்தேர்தலில் தமிழீழத் தேசியத்தின் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் விதத்தில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒற்றுமையாகப் போட்டியிட்டு - வெற்றியீட்டிய இருபத்திரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று முற்பகல் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர்.**

**இந்தக் கலந்துரையாடலின் இடையே தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை தலைவர் வே.பிரபாகரனும் சந்தித்துப் பேசுவார் என நம்பகமாக அறிய வருகின்றது.**

நாடாளுமன்றத்தில் தமிழ்க்கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்படப்போகினறார்கள் என்று அறிவித்துள்ள மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனும், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரான மனோ கணேசனும் கூட இன்றைய கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகின்றது.

இதில் சந்திரசேகரன் தமது கட்சியின சார்பிலும் மனோ கணேசன் ஐ.தே. கட்சிப் பட்டியலிலும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கிங்ஸ்லி இராஜநாயகம் தமது எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்து விட்டார் என்பதால் வேட்பாளர் பட்டியலில் விருப்பு வாக்கு வரிசை அடிப்படையில் அடுத்த நிலையில் இருக்கும் பா.அரியநேந்திரன் எம்.பியாகின்றார். அவரும் இன்றைய சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்.

கூட்டமைப்பின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பியாகவிருக்கும் ஈழவேந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிங்ஸ்லியின் இடத்துக்கு புதிய எம்.பி.அரியநேந்திரன்

பதவியை இராஜினாமாச் செய்துள்ள மட்டக்களப்பு மாவட்டக் கூட்டமைப்பு எம்.பி. கிங்ஸ்லி இராஜநாயகத்தின் இடத்திற்கு மாவட்டப்பட்டியலில் ஐந்தாம் இடம்பெற்ற பா.அரியநேந்திரன் எம்.பியாகின்றார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இருந்து வெளிவரும் 'தமிழ் அலை' பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளரான இவர் கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டு 34,835 விருப்புவாக்குகளைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தட்டிவான் தடம் புரண்டதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### வடமராட்சியில் சம்பவம்!

வடமராட்சி,ஏப்.20

வடமராட்சியில் தட்டிவான் ஒன்று வீதியைவிட்டு விலகிப்புரண்டதில் அதில் பயணித்தவர்களில் ஒருவர் உடல் நசுங்கிப் பலியானார்.மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

துன்னாலை, குடவத்தை என்ற இடத்தில் நேற்று முற்பகல் 10மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறைக்குச் சென்றுகொண்டிருந்த தட்டிவானே விபத்துக்குள்ளாகியது.

வீதியில் நீளமான விறகுத் தடிகளை சைக்கிளின் பின்பகுதியில் கட்டி எடுத்துச் சென்று கொண்டிருந்த நபருக்கு வழிவிட தட்டிவானின் சாரதி முயற்சித்தபோதே, வீதியைவிட்டு தட்டிவான் விலகித்தடம் புரண்டதாகக் கூறப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## விவசாய அபிவிருத்தி குறித்து ஆராய உலக வங்கி நிபுணர் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்.மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்வது குறித்து ஆராய்வதற்காக உலக வங்கி நிபுணர் எம்.ரிச்சர்ட் கிஜ் கொல்ம் நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

அவருடன் வடக்கு - கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் டி.ஆர்.எஸ்.ஞானச்சந்திரன் மற்றும் உதவிப்பணிப்பாளர் ஈ.எம்.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

நேற்றுக் காலை வருகை தந்த இக்குழுவினர் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிறுவனத்துக்குச் சென்று ஆலோசனை நடத்தினர்.

சங்குவேலிப் பகுதியில் உள்ள விவசாய நிலங்களையும் பொன்னாலைப்பகுதியில் நியாப்பினால் மேற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைக்கு மேலும் ஒரு தமிழ் எம்.பி. தேசியப் பட்டியல் மூலம் கிடைப்பாரா?

### இன்றைய வன்னிச்சந்திப்பில் ஆராயப்படலாம்

கொழும்பு,ஏப்.20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்தித்துப் பேசும்போது ஏனைய விடயங்களுடன் அம்பாறை மாவட்டத்துக்குத் தேசியப்பட்டியல் மூலம் எம்.பிபதவி ஒன்றை வழங்குவது பற்றியும் முக்கியமாக ஆராய்ந்து முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க் கூட்டமைப்புக்கு இரண்டு எம்பிபதவிகள் தேசியப்பட்டியல் மூலம் கிடைக்கும் பட்சத்தில் ஒன்று அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கப்படும் என்று ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு என்ன செய்யலாம் என்ற யோசனையுடன் அம்பாறை மாவட்ட எம்பி.கனகசபை பத்மநாதன் சந்திப்பில் கலந்துகொள்கிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மகாவலி அதிகார சபை ஜே.வி.பிக்குக் கிடைக்காது

### சுதந்திரக்கட்சி உயர்பீடம் முடிவு

மகாவலி அதிகாரசபையை ஜே.வி.பியினருக்கு வழங்குவதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உயர் பீடம் தீர்மானித்துள்ளது.

கட்சியின் உயர்பீடம் நேற்றுமுன்தினம் கூடி தற்போது ஜே.வி.பியினருடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து ஆராய்ந்தது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜே.வி.பியினரின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், மகாவலி அதிகாரசபை ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

மகாவலி அதிகாரசபைக்கு ஈடாக வேறொரு நிறுவனத்தை ஜே.வி.பியினருக்கு வழங்க ஜனாதிபதியிடம் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. எனி

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



இலங்கை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சுவாமி ரமண சைதன்யா நேற்று மாலை நல்லை ஆதீனத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதையும், அருகில் சுவாமி ரமண சைதன்யா அமர்ந்துள்ளதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஆச்சிரமச் சிறார்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# மாணவருக்கு தே.அ.அட்டை விநியோகிக்க விசேட கருமபீடம்

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குத் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கென நேற்று திங்கட்கிழமை முதல் விசேட கருமபீடம் ஒன்று ஆட்பதிவுத் திணைக்களத் தலைமை அலுவலகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இந்த விசேட கருமபீடம திறந்திருக்கும் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் விஜய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விசேட கருமபீடம், அரச விடுமுறை தினங்களிலும் திறக்கப்படும். தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்து இதுவரை அடையாள அட்டை கிடைக்கப்பெறாத மாணவர்கள் இந்த விசேட கருமபீடத்தில் நேரில் சென்று அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும். தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை இந்தக் கருமபீடம் இயங்கும்.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார். (ஒ-9-12)

## சபாநாயகர் தெரிவில்

# ஜனாதிபதிக்கும் ரணிலுக்கும் ஹெல உறுமய ஒரே பதில்

கொழும்பு,ஏப்.20

புதிய சபாநாயகரை நியமிப்பதற்குத் தமது கட்சியினருக்கு ஆதரவு நல்கும்படி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜாதிக ஹெல உறுமய முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கேட்டுள்ளார்.

இச்சந்திப்புப் பற்றி ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் கூறியதாவது:-

நாடாளுமன்றுக்குப் புதிய சபாநாயகர் ஒருவரைச் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் பிரதான கட்சிகள் இரண்டும் ஆதரவு கோரிவருகின்றன. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஞாயிறன்று எம்மைச் சந்தித்துத் தனது கட்சிக்கு ஆதரவு நல்கும்படி கோரினார்.

எனினும், எமது இறுதிமுடிவை 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது தெரிவிப்போம் என அவரிடம் கூறியுள்ளோம்.

அதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நேற்று எமக்கு அழைப்பொன்றை விடுத்துள்ளார். சபாநாயகர் தெரிவு விடயத்தில் தமது கட்சியினருக்கு ஆதரவு நல்குமாறு அவர் எம்மைக் கேட்டுள்ளார்.

நாம் இவ்விடயத்தில் இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை. நாடாளுமன்றம் கூடும் தினத்தில் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம் எனக் கூறியுள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் நேற்று ஹெல உறுமய சந்திப்பொன்றை ஏற்படுத்தி இவ்விடயம் பற்றிப் பேசவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அப்படியொரு சந்திப்பு இடம்பெறவில்லை எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# சபாநாயகரைத் தெரிவு செய்வதில் சிறுபான்மையினருக்கு அதிக பங்கு

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ஆசனத்தில் யார் அமர்வார் என்பதை முடிவு செய்வதில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிக பங்கு வகிப்பார்கள் என்று நம்பப்படுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு சபாநாயகர் தெரிவில் முக்கிய பாத்திரம் வகிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்று கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபாநாயகர் தெரிவு தொடர்பாக எதுவித முடிவையும் இதுவரை எடுக்கவில்லை.

ஆனாலும் இன்று அவர்கள் வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்த பிறகு ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை நாடாளுமன்றுக்கு 55 இற்கும் மேற்பட்ட புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் சுமார் 35 பேருக்கு கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சபையின் ஒழுங்குவிதிகள், அதிகாரங்கள், உரிமைகள், சட்டம் போன்றவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது. சபை நடைமுறைகள், உடை ஒழுங்குகள் பற்றியும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

உறுப்பினர்களின் தனிப்பட்ட விவரங்கள் அதிகாரிகளால் ஆவணப்படுத்தப்பட்டதுடன் முதல்நாள் அமர்வின் போது நடந்துகொள்ளும் முறைகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.(ப)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.20

தமிழீழ விளையாட்டுத்துறை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக் எனபவற்றின் அனுசரணையுடனான விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிமுதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

★ பிற்பகல் 2.30 மணி - குருநகர் பாடுமீன் வி.க. எதிர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.க.

★ பிற்பகல் 3.30 மணி - கொற்றாவத்தை சிவானந்தா வி.க எதிர் மணற்காடு சென் அன்ரனிஸ் வி.க.(ஒ-5)

☆ ☆ ☆

கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் சு.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் உள்ள சனசமூக நிலையங்களுக்கிடையிலான அஞ்சலோட்டமும் இடம்பெறவுள்ளது. (ஒ-5-75)

☆ ☆ ☆

வலி.வடக்கு,ஏப்.20

யாழ்.மாவட்ட கல்விவலயங்களிடையே தேர்வு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை

### 18 வயதுப் பிரிவு

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் எதிர் சென்பற்றிக்ஸ் கல்லூரி. (ஒ-86)

# வர்த்தக வங்கியின் ஏற்பாட்டில் மாணவர்களுக்குப் பரிசளிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.20

அண்மையில் வெளியான 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு ஒன்றை வர்த்தக வங்கியின் யாழ். கிளை ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.கிளை அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

மாணவர்களின் கல்வி முன்னேற்ற செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பத்துப் பாடசாலைகளைச் சேர்ந்த 12 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், 'அருனலு' கணக்குத் திட்டத்தில் இணைந்து இருந்த மாணவர்களே இந்தப் பரிசில் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் திட்டத்தை வர்த்தக வங்கி வருடாவருடம் செயற்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# நீர் இறைக்கச் சென்றவர் கிணற்றில் சடலமாக மீட்பு!

அச்சுவேலி,ஏப்.20

காலைவேளையில் தோட்டத்துக்கு நீர் இறைக்கச் சென்ற மாணவர் ஒருவர் தோட்டக் கிணற்றுக்குள் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நேற்றுக் காலை அச்சுவேலி தோப்புப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த துரைராசா சாருஜன்(வயது17) என்பவரே இறந்தவராவார்.

இவர் தோட்டத்துக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தார் என்றும் -

அப்போது நீர் இறைக்கும் குழாயை குலுக்கிய போது தவறிக் கிணற்றினுள் வீழ்ந்திருக்கலாம் என்றும் - நம்பப்படுகிறது.

தோட்டத்துக்குச் சென்றவரைக் காணவில்லை என்று உறவினர்கள் தேடிச் சென்ற போது கிணற்றுக்குள் அவர் இறந்து கிடப்பதைக் கண்டுள்ளனர். தலைப்பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து இரத்தம் வெளியேறி நீருடன் கலந்திருந்ததையும் அவர்கள் கண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இந்த மரணம் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாக அச்சுவேலிப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அன்ரன் மத்தியூஸ் தெரிவித்தார். (ஒ-10-11)

# சித்திரவதையில் ஈடுபடும் பொலீஸார் மீது நடவடிக்கை

கொழும்பு,ஏப்.20

பொலீஸாரால் தடுத்து வைக்கப்படுபவர்கள் பல்வேறு வகையான இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுவது குறித்த விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட பொலீஸாருக்கு எதிராகத் துரிதமாக வழக்குகளைத் தொடுப்பதற்கு சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் முடிவுசெய்துள்ளார்.

இதற்கென அவரது ஆலோசனைக்கு அமைய பிரத்தியேகமான பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அரச சட்டத்தரணி ஒருவர் அதற்குத் தலைமை தாங்குகிறார்.

நபர் ஒருவர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக எவரேனும் உயர் நீதிமன்றில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டால் அவருக்கு எதிராக விசாரணைகள் நடத்தி வழக்குத் தொடுக்கும் பொறுப்பு இந்தப் பிரிவைச் சார்ந்ததாகும்.

ஏற்கனவே இவ்வாறான 25 பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகின்றது. (ஒ-9-12)

# வடமேல் மாகாணசபைத் தேர்தல் பிரசாரம் நாளை நள்ளிரவு முடிவு

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல்மாகாண சபைத தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவடைகின்றன என்றும் நாளை மறுநாள் முதல் சட்டவிரோதமான தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் எவரேனும் ஈடுபட்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலீஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

மேலும் இம்முறை வடமேல் மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பின்போது வாக்களிக்கும் வாக்காளர்களின் இடது கை மோதிர விரலிலேயே மை பூசப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது வாக்காளர்களின் இடது கையின் சுட்டுவிரலில் பூசப்பட்ட மை இன்னமும் மறையாமல் இருப்பதாக பொது மக்கள் செய்த முறைப்பாட்டையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

# புத்தாண்டுக் கொண்டாட்டம் கொலையில் முடிவடைந்தது!

கொழும்பு,ஏப்.20

புதுவருடக் கோலாகலக் களியாட்டத்தில் இரு குழுவினர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்.

பத்துப்பேர் படுகாயமுற்று இறக்குவானை மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவம் நேற்று முன்தினமிரவு இறக்குவானை மொறவத்தெனிய என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

புதுவருட தினத்தை முன்னிட்டு மொறவத்தெனிய விளையாட்டு மைதானத்தில் பாட்டுக்கச்சேரி நடைபெற்றது. அப்போது, இரு இளைஞர் குழுவினருக்கிடையில் இடம்பெற்ற மோதலின்போதே 'கிரனேட்' வீசப்பட்டுள்ளது.

இறக்குவானையைச் சேர்ந்த எச்.எம்ஜயந்த (வயது 1?) என்ற இளைஞர் அந்த இடத்திலேயே மரணமானார். இறக்குவானை பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.(க)

# கிணற்றில் வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

சில நாள்களாக காணாமற்போனவர் என்று கூறப்படும் வயோதிபர் ஒருவர் சண்டிலிப்பாய் கல்வளையில் உள்ள பாவனைக்குதவாத கிணற்றிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வீதியைச் சேர்ந்த வைரவி- ஐயாத்துரை (வயது55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.மானிப்பாய் பொலீஸார் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ஒ-ரி)

# உதவி ஆணையாளராகப் பதவியுயர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்-பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தில் பல வருடங்களாக சிரேஷ்ட ஆய்வு அலுவலராகக் கடமையாற்றி வந்த பழனி பாலசுப்பிரமணியம் கடந்த முதலாம் திகதியிலிருந்து திருகோணமலை பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகப் பதவி உயர்வுபெற்றுச் சென்றுள்ளார் (ஜ-10-ரி)

# சு.க.-ஐ.தே.க. இணைந்து அரசு அமைக்க யோசனை

## ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து அரசொன்றை அமைப்பது தொடர்பான யோசனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டே இந்த யோசனை உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.


ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஐ.தே.கட்சி ஆகிய இரு கட்சிகளின் உயர் மட்டங்களில் செல்வாக்குப் பெற்றுள்ளவர்கள் அடங்கிய குழுவே ஜனாதிபதியிடம் இந்த யோசனையைச் சமர்ப்பித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊடகத்துறையைச் சேர்ந்த முக்கிய புள்ளிகள் இருவரின் முயற்சியின் அடிப்படையிலேயே மேற்படி குழு இரு கட்சிகளும் இணைந்து அரசு அமைப்பது குறித்த யோசனையைத் தயாரித்தது.

ஆயினும், இன்றுள்ள அரசியல் சூழ்நிலைகளுக்கமைய இணைந்த அரசொன்று உருவாக்கப்பட வேண்டுமாயின் அதற்கு ஜே.வி.பியின் ஒத்துழைப்பும் அவசியமென்று ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார் என்று அத தகவல் தெரிவித்துள்ளது.

சிறுபான்மைப் பலமுள்ள தற்போதைய அரசு அதற்குள் நிலவும் குழப்பங்களால் கவிழ்ந்து மற்றொரு பொதுத் தேர்தலுக்கு நாடு தள்ளப்படுவதைத் தடுக்க இணைந்த அரசு மூலமே பரிகாரம் காணமுடியுமென மேற்படி குழு கருதுவதாகவும் தெரிகிறது.

தற்போதைய சமாதான முயற்சிகள் சீர்குலையுமாயின் நாட்டின் பொருளாதாரம் மேலும் சீர்குலைவதுடன் இரு முக்கிய கட்சிகளின் தலைவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் அச்சுறுத்தல்களுக்கு உட்படக் கூடுமெனவும் அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-ரி)



ஈராக்கில் அடுத்தடுத்து இழப்புக்களைச் சந்தித்துக் கலவரமடைந்திருக்கும் அமெரிக்கப் படையினர் எந்தவேளையும் தம்மீதான தாக்குதல்களை எதிர்பார்த்துள்ளனர். நஜாப் நகரில் ஓய்வு எடுக்கும் அமெரிக்கப்படையினர் சிலரையே படத்தில் காண்கிறீர்கள். (ஐ)

# சிரியா எல்லை அருகே மோதல்: 12 அமெரிக்க வீரர்கள் சாவு!

பக்தாத்,ஏப்.20

சிரியா எல்லைக்கருகே ஈராக் தீவிரவாதிகளுடன் நடைபெற்ற மோதலில் [illegible] கடற்படையினர் உட்பட 10 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் இரு வீரர்கள் வெவ்வேறு சம்பவங்களில் இறந்தனர்.

பக்தாத்தில் நடைபெற்ற கெரில்லா ரொக்கெட் தாக்குதலின்போது ஈராக்கைச் சேர்ந்த 2சிவிலியன்கள் உயிரிழந்தனர்.

அமெரிக்க வீரர்கள் இறந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஏப்ரல் மாதத்தில் இதுவரை நடைபெற்ற சம்பவத்தில் இது மோசமானது எனக் கூறப்பட்டது.

தாக்குதலின்போது இயந்திரத் துப்பாக்கிகள், கனரகத் துப்பாக்கிகள், ரொக்கெட் மற்றும் கையெறி குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தெற்கு ஈராக் நகரமான திவானியாவில் இராணுவ வாகனத்தில் சென்ற அமெரிக்க வீரர் ஒருவரும், பக்தாத்தில் சாலையோரத்தில் குண்டுவெடித்த சம்பவத்தில் ஓர் அமெரிக்க வீரரும் உயிரிழந்தனர். (ஐ)

## மத்திய பக்தாத்தில் பலத்த குண்டுவெடிப்பு

பக்தாத்,ஏப்.20

ஈராக் நாட்டில் மத்திய பக்தாத்தில் திங்கட்கிழமை அதிகாலை மிக பலத்த வெடிகுண்டு ஓசை கேட்டது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையின் தலைமையகம் உள்ள பசுமை மண்டலம் பகுதியில் இருந்து வெடிச் சத்தமும் புகைமண்டலமும் எழுந்தன.

குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து கூட்டுப்படைத் தரப்பில் எவ்வித தகவலும் இல்லை.

ஞாயிற்றுக்கிழமையும் இப்பகுதியில் மூன்று முறை குண்டுவெடித்த ஓசை கேட்டது. ஈராக் தீவிரவாதிகள் அமெரிக்கக் கூட்டுப்படைகளைக் குறிவைத்து இவ்வாறு தாக்கிவருவது சமீப காலங்களில் அதிகரித்துள்ளது. (ஐ)

### உலக அரங்கில்

## கொலை முயற்சி: மத்திய அமைச்சர் தப்பினார்

பீஹார்,ஏப்.20

மத்திய புடைவைத்துறை அமைச்சர் சையது நவாஸ் ஹூசைனை, சில சமூகவிரோதிகள் காரினால் ஏற்றிக் கொலைசெய்ய முயன்றனர். ஆனால, அவர் உயிர் தப்பினார்.

பஹார் மாநிலம், கிரான்கஞ் என்ற இடத்தில் இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்தது.

இங்கு பிரதமர் வாஜ்பாய் வரும் வியாழக்கிழமை தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க இருக்கிறார். அதற்கான மேடை தயாராகி வருகிறது. இதைப் பார்வையிட வந்தபோது சமூகவிரோதிகள் சிலர் ஹூசைன்மீது காரை ஏற்றிக்கொல்ல முயன்றனர். (ஐ)

# ஸ்பெயின் துருப்புக்கள் ஈராக்கிலிருந்து விலகும்!

## புதிய ஸ்பானிய பிரதமர் ஸப்பட்டரோ அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம்

மட்றிட்,ஏப்ரல்20

**ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்புப் படை அணியிலிருந்து இயன்ற விரைவில் ஸ்பானியத் துருப்புக்கள் விலகும். ஸ்பெயினின் புதிய பிரதமர் ஜொஸ் லூயிஸ் றொட்றிக்கஸ் ஸப்பட்டரோ இந்த அதிர்ச்சி அறிவிப்பை விடுத்திருக்கிறார்.**

நேற்றுமுன்தினம் ஸ்பெயினின் புதிய அமைச்சரவை பதவியேற்ற கையோடு புதிய பாதுகாப்பு அமைச்சருக்குத் தாம் இதற்கான உத்தரவை விடுத்தார் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இயன்ற குறுகிய காலத்தில் - மிகப் பாதுகாப்பான முறையில் - ஸ்பானியத் துருப்புக்களை ஈராக்கிலிருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் புதிய பாதுகாப்பு அமைச்சருக்கு உத்தரவிட்டிருக்கின்றார்.

ஈராக்கில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அதிகளவு பங்கு பணியை ஐ.நா. ஏற்காவிட்டால் ஜுன் 30ஆம் திகதிக்கு முன்னர் ஈராக்கிலிருந்து தனது நாட்டுப் படைகளை வாபஸ் பெற்றுவிடுவார் எனப் புதிய பிரதமர் ஸப்பட்டரே முன்னா கூறியிருந்தார்.

ஆனால், ஜுன் முடிவதற்குள் அத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்வது தொடர்பான தீர்மானம் ஒன்று ஐ.நாவில் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியமான அறிகுறி ஏதும் தென்படாததால் படைவிலகலுக்குத் தாம் உத்தரவிட்டார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஈராக்கில் ஷியா முஸ்லிம் மத குருவான மெக்டடா அல் ச[illegible]ரின் தலைமையில் மிகப்பெரிய அளவில் தறபோது கிளர்ச்சி நடைபெற்றுவரும் நஜாப் நகருக்கு அருகிலேயே ஸ்பெயினின் ஆயிரத்து முந்நூறு துருப்புக்களைக் கொண்ட படை அணி நிலைகொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயினின் முன்னைய அரசு - ஸ்பானிய மக்களின் விருப்பத்துக்கு மாறாக - அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளுக்கு உதவும் விதத்தில் ஈராக்கிற்குத் தனது படைகளையும் அனுப்பிவைத்தது.

ஸப்பட்டரோ அதனைக் கடுமையாக எதிர்த்துவந்த நிலையில், கடந்த மாத முற்பகுதியில் அங்கு நடந்த தேர்தலில் ஈராக்குக்கு ஸ்பானியத் துருப்புக்களை அனுப்பிய விடயம் முக்கிய சர்ச்சையாக அமைந்தது.

தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் ஈராக்கிலிருந்து துருப்புக்களை விலக்குவோம் என்று ஸப்பட்டரோ அறிவித்திருந்தார்.

இந்நிலையில் - தேர்தலுக்கு நான்கு நாள்கள் இருக்கையில் - ஈராக்கிற்குத் துருப்புக்களை அனுப்பியதற்கும் பழிவாங்கும் விதத்தில் தலைநகர் மட்றிட்டின் ரயில் நிலையங்களில் அல்கெய்டா இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பு தொடர்வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியது. சுமார் இருநூறு பொதுமக்கள் உயிரிழந்தனர்; ஆயிரத்து எண்ணூறுபேர் காயமடைந்தனர்.

இந்த பின்னணியில் ஸப்பட்டரோவின் கட்சி எதிர்பாராத பெரு வெற்றியீட்டியது.


ஈராக்கிலிருந்து ஸ்பானியத் துருப்புக்களை விலக்குவது என்பது ஸ்பானிய மக்களின் முடிவு. கடந்த தேர்தலில் அவர்கள் வெளிப்படுத்திய ஆணை அதுதான் என்றும் - தமது நாட்டு மக்களின் ஆணையை முன்னெடுப்பது தமது பொறுப்பு என்றும் - ஸப்பட்டரோ நேற்றுமுன்தினம் தொலைக்காட்சி மூலம் தாம் நிகழ்த்திய உரையில் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், ஸ்பெயின் அரசின் முடிவு ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கத் தரப்புக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இஸ்லாமியத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு விட்டுக்கொடுப்பதாகவே ஸ்பெயினின் நடவடிக்கை வியாக்கியானம் செய்யப்படும் என்று அமெரிக்கா கூறுகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிராக யுத்தம் என்ற பாணியில் அமெரிக்கா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு மேற்குலகநாடுகளின் அரசுகள் இதுவரைக் காலமும் தயக்கமின்றி ஆதரவு தெரிவித்து வந்தன.

ஆனால், ஸ்பெயினின் உதாரணத்தைப் பின்பற்றி - உள்நாட்டில் தங்கள் மக்களும் இத்தகைய எதிர்ப்பைத் தேர்தல்மூலம் தங்கள் அரசுக்குக் காட்டலாம் என்று அஞ்சி - ஏனைய மேற்குலக நாடுகளும் அமெரிக்காவின் காலை வாரிவிடக்கூடிய அபாயம் எழுந்திருப்பதாக அமெரிக்கத் தரப்பு கருதுவதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)



ஸ்பெயின் துருப்புக்கள்.

## பிஜி நாட்டின் தேசியத் தந்தை கமிஸெஸே மாரா காலமானார்

பிஜி நாட்டின் ஸ்தாபகத் தந்தை என்று வர்ணிக்கப்படும் ரட்டுசேர் கமிஸெஸே மாரா தமது 83ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

பிரிட்டன் காலனித்துவ நாடான பிஜி, 1970இல் சுதந்திரம் பெறுவதற்கு முன்னின்று உழைத்த கமிஸெஸே மாரா, தென் பசுபிக் நாடுகளிடையே நீண்ட காலம் பிரதமராகவும் பிராந்திய அரசியலில் முக்கியத்துவம் பெற்றவராகவும் விளங்கியவர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு பின்னர் நியூஸிலாந்தில் சிகிச்சை பெற்று வந்த அவர், பிஜியின் தலைநகர் சுவாவில் வைத்தியசாலை ஒன்றில் மரணமானார். தமது பிராந்தியத்தில் சுமார் மூன்று தசாப்த காலம் மிகவும் மதிக்கப்பட்ட ஒரு தலைவராக விளங்கியவர் அவர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மருத்துவ பட்டதாரியான கமிஸெஸ்ஸே மாரா, 1970இல் சுதந்திர பிஜியின் முதல் பிரதமராகப் பதவி ஏற்றார். தொடர்ந்து இருபது ஆண்டுகள் அப்பதவியில் இருந்த அவர், பின்னர் அந்நாட்டின் ஜனாதிபதியானார்.

## மருத்துவமனையில் மரடோனா உயிருக்குப் போராட்டம்!

புவனர்ஸ்அயர்ஸ்,ஏப்.20

பிரபல ஆர்ஜென்ரீனா நாட்டு காற்பந்து வீரர் டிகோ மரடோனா ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். போதை மருந்துக்கு அடிமையான மரடோனா அதிலிருந்து விடுபட நீண்டநாள்களாகவே சிகிச்சை பெற்று வருகிறார். திடீரென்று அவர் உடல் நிலை மோசமானதால் அவர் ஆர்ஜென்ரீனா மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.



அவருக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. அவரது நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர். (ஐ)

## இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் முதலாம் கட்ட வாக்களிப்பு இன்று

இந்திய நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில், முதல்கட்ட வாக்குப்பதிவு 14 மாநிலங்களில் 140 தொகுதிகளில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

இத்தொகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பிரசாரம் அதிகாரபூர்வமாக முடிந்தது என இந்திய மத்திய தேர்தல் ஆணையர் பி.பி. டாண்டன் கூறினார்.

தேர்தல் நடத்தை விதிகள் சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டன என்று நாடு முழுவதிலும் இருந்து ஆணையத்துக்கு வந்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன எனவும் அவர் கூறினார்.

முதல்முறையாக நாடுமுழுவதிலும் மின்னியல் வாக்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

முதல்கட்டத் தேர்தலில் 10 லட்சத்து 75 ஆயிரம் மின்னியல் வாக்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனவும் டாண்டன் கூறினார்.

ஆந்திரம், கர்நாடகம், ஒரிஸா மாநில சட்டப்பேரவை தொகுதிகளின் ஒரு பகுதிக்கும் முதல்கட்ட வாக்குப் பதிவு இன்று நடைபெறுகிறது.

முதல்கட்டத் தேர்தலில் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி ,8மத்திய அமைச்சர்கள், 2முன்னாள் மக்களவைத் தலைவர்கள், 3 முன்னாள் முதல்வர்கள், முன்னாள் பிரதமர் எச.டி.தேவகௌடா உட்பட 809 பேரின் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும்.

குஜராத்தில் - 26, மகாராஷ்டிரத்தில் - 24, ஆந்திராவில் -42, கர்நாடகத்தில் 15,பீகார், ஒரிஸா மற்றும் சத்தீஸ்கரில் - தலா 11 ,அஸாம் மற்றும் ஜார்க்கண்டில் தலா 6, ஜம்மு - காஷ்மீர்,மேகாலயத்தில் தலா 2, மணிப்பூர், மிஸோரம், தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, டாமன் மற்றும் டியு, அந்தமான், நிக்கோபார் தீவுகளில் தலா ஒரு தொகுதியிலும் ஞாயிறு மாலை 5மணியுடன் தேர்தல் பிரசாரம் ஓய்ந்தது.

இன்று முதல்கட்டத் தேர்தல் நடைபெறும். இந்த 14 மாநிலங்களிலும் 75 ஆயிரம் பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

757 கம்பனிகள் மத்திய ரிசர்வ் பொலீஸ் படை, மத்தியத் தொழில் பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் பொலீஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

பயங்கரவாதிகள் தாக்குதல் அச்சம் உள்ள ஜம்மு - காஷ்மீர், மகாராஷ்டிரம் மற்றும் சமூக விரோதசக்திகளின் தாக்குதல் அச்சம் உள்ள குஜராத் ஆகிய மாநிலங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.(ஐ-க)

# 'கேபிள்' தொலைபேசி இணைப்புகள் தென்மராட்சிப் பகுதிக்கும் கிடைக்குமா?

உலகளாவிய ரீதியில் முன்னேறி வரும் தொழில்நுட்ப சேவைகளில் தொலைத் தொடர்புச் சேவையும் ஒன்று என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அந்தளவு முன்னேறியுள்ள தொலைத் தொடர்புச் சேவையை யுத தத்தினால் சிதைவடைந்து புனரமைக கப்பட்டுவரும் தென்மராட்சிப் பிர தேசத்தில் மீளக்குடியமர்ந்துவரும் மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை என்பதுதான் கவலைக குரியது.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் சாவ கச்சேரியில் இருந்த பரிவர்த்தனை நிலையம் மூலம் பெரும் எண்ணிக்கை யான மக்கள் தொலைபேசி இணைப புக்களைப் பயன்படுத்தி வந்தனர். அதன்பின்னர் ஏற்பட்ட யுத்த அனர்த் தங்கள் காரணமாக இச்சேவை தென மராட்சிப் பிரதேசத்தில் இல்லாமற் போனது. தொலைபேசி பரிவர்த்தனை நிலையமும் அதன் அலுவலகமும் ஓரளவு சேதமடைந்த நிலையில் தற்போது காணப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குடாநாட்டில் தொலைத் தொடர்புச் சேவைகள் மோட்டோ ரோலா மூலம் ஆரம்பிக்கப்பட்டு அதன்பின்னர் கேபிள தொலைத்தொடர்பு சேவைகள் ஆரம் பிக்கப்பட்டு பல இடங்களுக்கும் விஸ் தரிக்கப்பட்டன.

மோட்டோரோலா தொலைத் தொடர் புச்சேவை ஆரம்பிக்கப்பட்டபோது வியாபாரநோக்கத்துடன் ஒருசிலரால் அதிக பணம் செலுத்தப்பட்டு இச் சேவைகள் அங்கொன்றும் இங்கொன்று மாக தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்தன. இந்தச் சேவை யின்மூலம் அழைப்புக்களைப் பெறு வதற்குப் பொதுமக்கள் அதிக பணம் செலுத்தவேண்டியிருந்தது.

2000ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேச மக்களின் இடம்பெயர்வின் பின்னர் மீண்டும் 2002 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் வியாபாரநோக்கு டன் மட்டும் இச்சேவைகள் தொடர்ந் தும் வழங்கப்பட்டு வருகின்றன.

2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச திணைக்கள அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், ஒருசில வசதி படைத்த வீடுகள் ஆகியவற்றுக்கு இச்சேவைகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம், வடமராட்சி, வலி காமம் போன்ற இடங்களில் தொலை பேசி பரிவர்த்தனை நிலையங்கள் மூலம ஆயிரக்கணக்கான வீடுகளுக்குத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின் றன. இப்பிரதேசங்களில் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் சந்துபொந்து களிலும் தொலைபேசி இணைப்புக் கள் வழங்கப்பட்டு அப்பிரதேச மக் களின் தேவைகள் பூர்த்திசெய்யப்படு கின்றன.

யுத்தத்தினால் சேதமடைந்த தென மராட்சிப் பிரதேசத்தில் கேபிள தொலைத்தொடர்புச் சேவையைக் கொண்டு வருவதற்கு எவரும் முன் வராததால் இப்பிரதேச மக்கள் தமது தேவைகளுக்குப் பெருமளவு பணம் கொடுத்துச் சேவைகளைப் பெறவேண்டி யுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலக புள்ளி விவரங்களின் பிரகாரம் கடந்த மாதம் வரை சுமார் 20 ஆயி ரம் குடும்பங்கள் தமது சொந்த இருப பிடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளன. சாவகச்சேரி நகர்ப்பகுதியில் அனைத்து அரச திணைக்கள அலுவலகங்கள், வங்கிகள், கூட்டுறவு அலுவலகங்கள மற்றும் 90 வீதமான வணிக நிலை யங்கள் ஆகியவையும் செயற்பட்டு வருகின்றன.

பெருமளவு அலுவலகங்கள், வணிக நிலையங்கள் ஆகியவற்றுக் குத் தொலைபேசி சேவை அத்தியா வசியமான போதிலும், அதிக அளவு பணம் செலுத்தித் தொலைபேசிச் சேவையைப் பெறமுடியாத நிலை யில் அவை உள்ளன.

யுத்தத்தினால் இப்பிரதேசம் சிதை வடைந்தபோதிலும், மனம் தளராத மக்களின் ஒட்டுமொத்த முயற்சியினால் குறுகிய காலத்தில் இங்கு யுத்தம் நடைபெற்றதா எனக் கேள்வி கேட்கும நிலையில் நகர்ப் பகுதியினைக் கட்டியெழுப்பியுள்ள போதிலும், இங்கு கேபிள் தொலைத் தொடர்புச்சேவை யினை ஆரம்பிக்கச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முன்வராததையிட்டு மக்கள் பெரும் விசனம் தெரிவிக்கின் றனர்.

1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை மின்சார சபையினால் பல கோடி ரூபா செலவில் அமைக்கப் பட்ட மின்விநியோகத் திட்டத்தினால் பல கிராமங்கள் நன்மையடைந்தன. இத்திட்டத்தின் பயன்பாட்டினை

## செய்திக் கட்டுரை

இலங்கை மின்சாரசபை ஒரு தொகையினைத் தானும் பெறாத நிலையில் முற்றாக அழிக்கப்பட்டன. இந்த நிலையிலும் பிரதேச மக்களின நலன்கருதி மீண்டும் மின்சார விநி யோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த இரு ஆண்டுகளில் பல இடங்களுக்கு பலகோடி ரூபா செலவில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், தொலைத்தொடர்புச் சேவையைப் பிரதேச மக்கள் பெற விரும்புகின்ற போதிலும் இத்திட்டத் தினை இங்கு மேற்கொள்ள தொலைத தொடர்பு நிறுவனம் முன்வராததை யிட்டுப் பலர் அதிருப்தியடைந் துள்ளனர்.

கடந்த வருடம் சாவகச்சேரியில் நடைபெற்ற நடமாடும் செயலக சேவையில் பிரதேசத்தில் கேபிள் தொலைத் தொடர்புச் சேவையை மீண்டும் ஆரம்பிக்கக்கோரி இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். அங்கு வருகை தந்திருந்த தொலைத தொடர்பு நிறுவன அதிகாரி - பிர தேசத்திலிருந்து தொலைத் தொடர்பு கோரி விண்ணப்பிப்போர் தொகை குறைவாக உள்ளதாகவும், ஆயிரம் பேர் வரை விண்ணப்பம் கோரினால் அதனை வழங்க முடியுமெனவும் கூறியிருந்தார்.

இங்கு கேபிள் தொலைபேசி வசதி செய்வதற்குரிய எந்தவொரு ஆயத்தமும் செய்யாததால் மக்கள் எவரும் விண்ணப்பம் செய்ய முன் வராமல் உள்ளனர்.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் திருத்தக்கூடிய நிலையில் உள்ள பரிவர்த்தனை நிலையம், அதன் அலு வலகம் ஆகியவற்றைப் புனரமைத் துத் தொலைத் தொடர்புக் கோபுரம் ஆகியவற்றை அமைத்தால் ஆயிரக் கணக்கான விண்ணப்பங்கள் கிடைக்கு மெனவும் தெரிவிக்கப்படுகிறது.

**தென்மராட்சிச் செய்தியாளர்**

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன் றின் மூலம் விண்ணப்பங்கள் கோரி னாலும் விண்ணப்பங்களை வழங்கத தாம் தயாராக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். ☆

## விலைகள் அதிகரிப்பு

ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளிலுள்ள சில தேநீர்க் கடை களில் தேநீர், வடை, பால் தேநீர் என்பவற்றின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன.

இங்கு 3 ரூபாவாக விற்பனை செய யப்பட்ட தேநீர் 4 ரூபாவாகவும், 7ரூபா வாக இருந்த பால் தேநீர் 8 ரூபா வாகவும், 7 ரூபாவாக விற்பனை செய யப்பட்ட வடை 8 ரூபாவாகவும் விற் பனை செய்யப்படுகின்றன. (10-100)

## அமெரிக்க டாக்டர்களின் சிகிச்சை

அமெரிக்க இராணுவத்தின் வைத தியர்கள் அடங்கிய குழுவொன்று எதிர் வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தரவுள்ளது. எனவே பிளாஸ் ரிக் சத்திரசிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சை என்பவற்றை மேற்கொள்வதற கென ஏற்கனவே பதிவுசெய்தவர்களை யும் பதிவுகளை மேற்கொள்ளாத ஏனைய நோயாளர்களையும் எதிர் வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்குவருகை தருமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் அறி வித்துள்ளார். (ஜ-10)


## விற்பனைக்கு

Sharp போட்டோ பிரதி.
Phd லெமெவேற்றிங்.
L கைபிடி Honda (மண்ணெண்ணெய்)
2300 Robin டீசல், தளபாடங்கள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: செ.நாகேந்திரன்,
'தேச வாசம்' மீசாலை, புத்தூர் சந்திக்கு அருகில்
சனி, ஞாயிறு தினங்களில்
(21) பார்வையிடலாம். (31049)

## காணி/வீடு தேவை

கொடிகாமத்திற்கும் சாவ கச்சேரிக்கும் இடையில் கண்டி வீதியில் அல்லது கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் ஒரு கி.மீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் அமைந்த வெற்றுக்காணி அல் லது வீட்டுடன் கூடிய காணியோ தேவை. விலை விவரத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.
சுவர்ணராஜ்,
மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.
T.P.:0777 876805,
0115516597. (31039)

இதோ எதிர்பாருங்கள்!

இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்

வெளிப்படுத்தின விசேஷ கூட்டங்கள்

இதுவோர் அரிய சந்தர்ப்பமாக மீண்டும் ஒரு தடவை யாழ்ப்பாணத்தில்
இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையைப் பற்றிய
எக்காளம் முழங்கப்போகிறது. இந்த எக்காளச் சத்தத்தைக் கேட்க
அனைவரும் திரண்டு வாருங்கள்.
வந்து வேதத்தின் அதிசயத்தைக் காணுங்கள்.


காலம்: ஏப்ரல் 2004
19 முதல் 23 வரை
26முதல் 29வரை

தினமும் மாலை 4.30மணிக்கு
இடம்: பெத்தேல்,
104,இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தினமும் காலை 10.00 மணிக்கு விசேஷ வேதப்பாடங்களும் நடைபெறும்
கண்கள் யாவும் அவரைக் காணும்.......வெளி 1:7
பிரவேசம் இலவசம்
T.P.: 021-222 6458.

(30965) (26-16-18)


## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 08 - 11 - 1956

மறைவு 20 - 04 - 2002

### அமரர் சபாரட்ணம் ஜெகநாதன்
(மல்க்கன் – சித்தன்கேணி)

இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் அன்பு முகம் மறக்கமுடியாது!
உங்கள் நினைவும் நெஞ்சை விட்டு அகலாது.

"கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள் பாக்கியவான்கள்
பரலோக ராஜ்யம் அவர்களுடையது"
"நீதிமானோ தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன்." (நீதி 14:32)

அன்பு மனைவி. சகோதர சகோதரிகள். மைத்துனர்மார்.
மைத்துனிமார். மருமக்கள். பேறாமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
ஜெ.வதனி (மனைவி)
சித்தன்கேணி.

(31051)(34-21-16-18)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 29 - 04 - 1927

மறைவு 15 - 03 - 2004

### அமரர் செல்லன் முத்து

அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து அனுதாபம் தெரிவித்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய அன்புள்ளங்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (20. 04. 2004) செவ்வாய்க்கிழமை எங்களுடைய இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'செல்லமகால்',
கூவில், புலோலி தெற்கு,
புலோலி.

- குடும்பத்தினர்.

(31032)(38-21-16-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 22 - 05 - 1964

இறப்பு 02 - 04 - 2003

தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் இந்தியாவில்
சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

### சிவசுப்பிரமணியம் சண்முகநாதன்

திதி: 20.04.2004

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மிதயம்
மீண்டு ஒருமுறை உமைக்காண ஆவல் மீற நாமும்
ஈண்டு உமது நினைவுடனே இப்பூவுலகில் வாழ்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தாய்: சிவசுப்பிரமணியம் அமுதம்மா
மனைவி: சர்வேஸ்வரி (இந்தியா)
பிள்ளைகள்: பிரியங்கா, சுவர்ணா, டியோன்சன்
சகோதர சகோதரிகள்: லோகநாயகி, யோகநாயகி, தேவதாஸ் (லண்டன்), சாந்தகுமார் (லண்டன்), லோகதாஸ் (லண்டன்), சிவயோகதாஸ் (லண்டன்).
மைத்துனர்: நித்தியராசா, சாந்தி (லண்டன்), மலர்விழி (லண்டன்), சிவனேஸ்வரி, தர்சினி (பிரான்ஸ்).

தோப்புக்காடு,
காரைநகர்.

(31054)(34-21-16-18)

உதயன்

## நாட்டு நலனை மறந்து சுயநல முயற்சி!

நாட்டின் அரசமைப்பை, அதற்கான அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் மாற்றுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டு வரும் முயற்சிகள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன.

அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் அதனை மாற்ற முயல்வது ஒரு வகையில் ஜனநாயக விரோதச் செயல் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஒரு ஜனநாயக நாட்டில் நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கல் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம், நீதி, நிர்வாக அதிகாரம் கொண்ட நீதித்துறை ஆகிய மூன்றும் பிரதானமானவை. நாட்டில் ஜனநாயகத்தையும், அதியுயர் சட்டமான அரசமைப்பையும் பேணிப் பாதுகாப்பது இந்த முத்துறைகளின் தலையாயக் கடமை.

இந்த முத்துறைகளில் ஒன்றிரண்டைத்ததன் கைவசப்படுத்தி, அதன்மூலம் அரசமைப்பை மாற்றியமைப்பதற்கு ஒற்றைக்காலில் விடாப்பிடியாக நிற்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தற்போதைய அரசமைப்பின்படி, நாட்டின் அதி உயர் அதிகாரப் பதவியில் இன்னும் ஓரிரண்டு ஆண்டுகள் மட்டுமே தாம் இருக்கமுடியும் என்ற காரணத்தினால்தான், அதை மாற்றியமைப்பதன் மூலம் அதிகாரத்தைத் தன் கைவசம் தொடர்ந்தும் தக்கவைக்க அவர் துடியாய்த் துடிக்கிறார் என்பது பரகசியம்.

கடந்த தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆக 45 சதவீத வாக்குகளையே பெற்றது. அந்தக் கூட்டமைப்புக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கூடக் கிடைக்கவில்லை.

அத்தகைய நிலையில், நாட்டின் அரைவாசி வாக்காளர்களின் ஆதரவைக் கூடப் பெறாத அவரது கூட்டமைப்பு, ஒருதலைப்பட்சமாக - தான்தோன்றித்தனமாக - நாட்டின் அரசமைப்பை, அதன் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் மாற்ற முயல்வது முற்றும் முழுதாக ஜனநாயக விரோதச் செயலாகும்.

அத்தோடு, அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரைவாசி மக்களின் ஆதரவைக் கூடப் பெறாத ஓர் அரசுக்கு தார்மீக உரிமை ஏதும் இல்லை என்பதும் நோக்கற்பாலது.

தொத்துப்பொறியில் தான் தமது வசப்படுத்தியிருக்கும் நாடாளுமன்றத்தையும் தம்மிடம் உள்ள நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத்தி, அரசமைப்பை - அதன் ஏற்பாடுகளுக்கு முரணான விதத்தில் - மாற்றிவிடலாம் என ஜனாதிபதி திட்டமிடுகின்றார்; கனவு காண்கின்றார்.

நீதிக்கு - சட்டத்துக்கு - முரணான வகையில் எடுக்கப்படும் இந்த எத்தனத்தைத் தடுக்கும் பொறுப்பும் கடமையும் நீதித்துறையின் மேல் சுமத்தப்படுகின்றது. அது ஒன்றே உயர் சட்டமான அரசமைப்பை, அதன் ஏற்பாடுகளுக்கு மாறாகத் தூக்கி வீசுவதைத் தடுக்கமுடியும்.

சட்டமுறைமைகளுக்கு மாறாக அரசமைப்பைத் தூக்கி வீசப்படும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு சட்ட ஏற்பாடுகளும் நீதித்துறையும் தவறுமானால் -

அத்தகைய முயற்சியைத் தாமே தடுத்து நிறுத்துவதற்கு சட்ட முறைமைகளுக்கு மாறான போக்கைக் கடைப்பிடிப்பதற்குப் பொதுமக்களும் தள்ளப்படக் கூடிய சூழல் எழலாம் என்பதையும் அதிகாரத் தரப்புகள் சிந்திப்பது நல்லது.

சிறுபான்மை இனங்களின் நலனைக் கவனிக்காமல் - அவர்களின் விருப்பத்துக்கு மாறாக - இத்தகைய அரசமைப்பு மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் அதுவும் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் கவனத்திற்கொள்ளப்படவேண்டியதாகும்.

இத்தகைய அரசமைப்பு மாற்றத்துக்குச் சிறுபான்மையினரின் கட்சிகளான தமிழர் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை எந்த வகையிலும் உடன்படமாட்டா என்பது ஓரளவு வெளிப்பட்டுள்ளது.

இந்நிலையில், இத்தகைய அரசியல் முயற்சிகளில் ஜனாதிபதி தீவிரமும் முனைப்பும் காட்டுவது மேலும் பல அரசியல் சிக்கல்களையும் குழப்பங்களையும், இனரீதியான பிளவுகளையும் உருவாக்கும் என்பது கண்கூடு.

முழுநாட்டையுமே உலுப்பும் மிக முக்கிய பிரச்சினை இனப்பூசல்தான். அந்தப் பிணக்குக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் சிரத்தையும் அவசரத்தையும் காட்டுவதை விடுத்து, தனது அதிகாரத்தைத் தக்கவைக்கும் அரசமைப்பு மாற்ற முயற்சியில் ஜனாதிபதி தீவிர ஆர்வமும் வேகமும் காட்டுவது சுயநலத்தின் பாற்பட்டதே அன்றி, நாட்டின் நலனை நோக்கமாகக் கொண்டதல்ல என்பது தெளிவு.

சுயநலத்துக்காக நாட்டின் நலனைக் கேள்விக்குள்ளாக்கப் போகின்றாரா ஜனாதிபதி என்பதே கேள்வி.

# டிரோன் பெர்னாண்டோ மீது விரைவில் ஐ.தே.கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு,ஏப்.20

இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மீது ஐக்கிய தேசியக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீதும் அதன் தலைமைத்துவம் மீதும் இவர் தெரிவித்துவரும் விமர்சனங்களே இதற்கான காரணம் எனக் கூறப்படுகின்றது.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் மீது கட்சி மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை தொடர்பான இறுதித்தீர்மானம் கட்சியினால் இவ்வாரம் தீர்மானிக்கப்படும் எனக் கட்சியின் பொதுச் செயலாளர் சேனரத் ஹப்புகொட்டுவ தெரிவித்துள்ளார்.

பெர்னாண்டோ அண்மையில் வெளியிட்டிருக்கும் அறிக்கைகளைக் கட்சியின் செயற்குழுவும், சட்டத்தரணிகளும் ஆய்வு செய்யவிருக்கின்றார்கள்.

தேசியப் பட்டியலில் தாம் இணைக்கப்படாதது குறித்து முன்னாள் வெளியுறவு அமைச்சர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதேவேளை, இனிவரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற வேண்டுமானால் கட்சி அதன் அடிப்படைச் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டுமென்று பெர்னாண்டோ ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, தொடர்ந்தும் ஐக்கியதேசியக் கட்சியோடு இணைந்திருப்பதில் தமக்குள்ள சந்தேகத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை -

ஐக்கிய தேசியக்கட்சி உடனடியாக முன்னாள் வெளியுறவு அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியின் தலைமைத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படாதவிடத்துக் கட்சியின் ஒழுக்கக்கட்டுப்பாடு சீர்குலையும என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-ரி)

# புதிதாகப் பத்துப் பாடசாலைகளை புனரமைக்க 'நிகொட்' நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஏப்.20

குடாநாட்டில் 10 பாடசாலைகள் மற்றும் அம்பன் வைத்தியசாலை என்பனவற்றைப் புனரமைக்க ஐந்து கோடியே 20 லட்சம் ரூபாவை 'நிகொட்' அமைப்பு வழங்கவிருக்கின்றது.

கடந்த சில வருடங்களாக 'நிகொட்' அமைப்பினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையும் கட்டத்தை அடைந்துள்ளன.

இநதநிலையில், புதிதாகத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இந்த நிதி கடந்தவாரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்துப் பாடசாலைகள், அம்பன் வைத்தியசாலைப் புனரமைப்பு, யாழ். மாநகர சபைப் பிரதேசத்துக்குத் தெருவிளக்குகள் பொருத்துதல், யாழ். ஆஸ்பத்திரிக்கு வைத்திய உபகரணங்கள் வழங்கல், சமூக, பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியன இந்த நிதிமூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத்திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# லங்கா சமசமாஜக் கட்சிக்கு புதிய செயலாளர் நியமனம்

கொழும்பு, ஏப்.20

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளராக விமல சிறி விமல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் முன்னாள் பிரதிச் செயலாளரான இவர் நேற்று முன்தினம் இரவு நடந்த அரசியல் குழுக் கூட்டத்தில் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

பட்டி வீரக்கோன் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அவரைத் தெரிவுசெய்வது என லங்கா சமசமாஜக் கட்சி முடிவுசெய்துள்ளது.

கட்சியின் அனுமதி இல்லாது பேராசிரியர் திஸ்ஸ விதாரண அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை ஆட்சேபித்து பட்டி வீரக்கோன் இராஜினாமாச் செய்திருந்தார்.

(ஐ-ரி)

# பாடசாலை மாணவருக்கு இரும்புச்சத்து வில்லைகள்

கொழும்பு,ஏப்.20

மாணவர்களிடம் காணப்படும் குருதிச்சோகை நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் இரும்புச்சத்துக் குறை நிரப்பி வில்லைகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை சுகாதார அமைச்சு பாடசாலை மட்டத்தில் ஆரம்பித்திருக்கிறது.

இதன் முதற்கட்டமாக நாட்டிலுள்ள பாடசாலைகளில் தரம்7, தரம் 10 மாணவர்களுக்கு வாரத்திற்கு ஒருவில்லை என்ற ரீதியில் 6மாதத்திற்கு இரும்புச் சத்துவில்லைகள் வழங்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஏனைய வகுப்பு மாணவர்களுக்கும் இரும்புச் சத்து வில்லைகள் வழங்கப்படும்.

இதன்படி ஹற்றன் வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இரும்புச் சத்துவில்லைகள் வழங்குவதற்கு பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(ஐ-ரி)

# மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது!

## மின்சக்தி அமைச்சர் தகவல்

கொழும்பு,ஏப்.20

மின்சார விநியோகத்துக்காகப் பாரிய செலவுகளை எதிர்நோக்கிய போதிலும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தப் போவதில்லை என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மின்சாரத்துக்கு அதிக கட்டணம் அறவிடும் நாடாக இலங்கையே விளங்குவதாக அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும் மின்கட்டணத்தைக் குறைப்பதற்கு எவ்வித சாத்தியக் கூறுகளும் இல்லை. தேவையான அளவு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிலக்கரி மின் ஆலைகளை நிறுவுவது அவசியம். இதற்கென பொருத்தமான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நீர்மின் நிலையங்களை அண்டிய பிரதேசங்களில் நீர்மட்டம் உயரும் பட்சத்தில் தற்போது அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திக்காகச் செலவிடும் தொகையைக் குறைத்துக் கொள்ளமுடியும் என அவர் தெரிவித்தார். இதற்கு மழை வீழ்ச்சியே கைகொடுக்கும் காரணி. எனினும், எந்தவொரு காரணத்துக்காகவும் மின்வெட்டு அமுல் படுத்தப்படாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி)

### நாளை

சித்திரை 09
புதன்கிழமை
(21.04.2004)
திதி : துதியை
இரவு 10.08 வரை.
நட்சத்திரம்: பரணி
பகல் 11.32 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 4.31 - 6.01
ராகுகாலம்: 12.01 - 1.31
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடினம் என்று பிறர் கூறியதைச் செய்துமுடிப்பவன் தான் திறமைசாலி.

# யாழ். நகரப் பாடசாலைகளில் சுற்றாடல் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.20

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் கீதம் இசைத்தல், பா ஓதுதல் என்பன திறந்த போட்டிகளாக நடத்தப்படவுள்ளன.

இப்போட்டி அடுத்த மாதம் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

ஒரு பாடசாலையில் இருந்து 3 மாணவர்கள் அல்லது 3 குழுக்கள் என்ற விதிக்கமைய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகர சபையின் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதில் தேர்ச்சி பெறும் பாடசாலை மாணவர்கள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். சூழலுடன் தொடர்புபடுத்தும் பொருளுக்கமையவே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

(ஐ-6)

# வடமேல்மாகாணசபைத் தேர்தலுக்கான 2ஆம் கட்ட தபால்மூல வாக்குப் பதிவு

கொழும்பு,ஏப்.20

வடமேல்மாகாணசபைத் தேர்தலுக்கான 2 ஆம் கட்ட தபால் மூல வாக்குப்பதிவு நேற்று இடம்பெற்றது. முதற்கட்ட வாக்குப்பதிவு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வாக்களிக்கத் தவறுபவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரைச் சென்றடையும் வகையில் வாக்குப்பதிவு செய்யமுடியுமெனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

(ஐ)

# யாழ். செயலகத்தில் இன்று இணைப்புக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் குடியமர்வு தொடர்பான இணைப்புக்குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெறும் இநத இணைப்புக்குழுக்கூட்டத்தில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குதல், உலர் உணவு விநியோகம், யுத்தத்தால் அங்கவீனராக்கப்பட்டோருக்கான உதவிகள், இந்த வருடம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள், 'நியாப்', 'நிகொட்' மற்றும் 'நீர்ப்' ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள், சுகாதாரம், மீன்பிடி, போக்குவரத்து வசதிகள் மற்றும் மின்சார விநியோகம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# கிழக்கு மக்கள் இடம்பெயர்வு: ஜனாதிபதி தலைமையில் கூட்டம்

கொழும்பு,ஏப்.20

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அண்மையில் இடம்பெற்ற மோதலினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரண உதவிகள், புனர்வாழ்வு அளிக்கும் திட்டங்கள் தொடர்பான விசேட கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் 'யுனிசெப்' அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம், புனர்வாழ்வுத்துறைசார்ந்த முகவர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் 3 மாவட்டங்களையும் சேர்ந்த அரச அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ-ரி)

# இயக்கச்சிச் சந்தை விரைவில் இயங்கும்

தென்மராட்சி,ஏப்.20

பதினைந்து வருடகால இடைவெளிக்குப் பின்னர் இயக்கச்சிப் பொதுச் சந்தை நாளைமுதல் மீண்டும் இயங்கவுள்ளது.

1990ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்தச் சந்தை மூடப்பட்டது. யுத்த அனர்த்தங்களால் அங்கிருந்த கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

இயக்கச்சிப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்ததையடுத்து பளைப் பிரதேச சபையினால் தற்காலிகமாகக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு சந்தை மீண்டும் இயங்க ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## 7 ஆம் வருட இதய அஞ்சலி

விண்ணிலிருந்து நயினை மண்ணில் 01 11 1967



பாரினிலிருந்து பரந்த விண்ணில் 06 05 1997

செல்வன்
காராளபிள்ளை விநாயகசிவம்
(கண்ணன்)

ஒரு நொடியில் எமைப்பிரிந்து ஏழாண்டுகள் ஆனதுவே
நெருடுகிறது எம்மனது தேடுகின்றோம் தேசமெல்லாம்
வருவாயா என எண்ணி வாசலையே பார்த்திருப்போம்
பெருகுகிறது கண்ணீர் அருவியாய் எம் கண்ணில்
புதுவருடம் பிறக்கையிலே!

விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்,
வவுனியா,
நயினாதீவு. (31025)(38-16-17-18) -குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கச்சாய் கண்ணகை அம்மன் சந்நிதான
முன்னாள் உப பூசகர்
வேலுப்பிள்ளை
சிதம்பரப்பிள்ளை
அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு
இன்றைய 31 ஆம் நாளில் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
அவரது இழப்பால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்கு
எமது கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்குகின்றோம்.

வினோபா சனசமூக நிலையம்,
வினோபா நகர், கச்சாய். அன்பு நண்பர்கள் குழாம். (31001)(16-17-18)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 13 05 1918



மறைவு 22 03 2004

திருமதி புஷ்பமாலை செல்வராஜா

22-03-2004 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு அமரர் புஷ்பமாலை செல்வராஜா அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (21-04-2004) புதன்கிழமை காலையில் திருநாவலூர் தெணியம்மன் ஆலய மடத்தில் நடைபெறும். தொடர்ந்து நிகழும் வீட்டுக்கிருத்தியம் ,மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வி.மு. வீதி,
பருத்தித்துறை. (31007)(16-17-18) குடும்பத்தினர்.
(மகள்,பேரப்பிள்ளைகள்)


**க.பொ.த.(உயர்தர) பரீட்சையின் பின்னர் இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு**

- பிருந்தாவன் கல்லூரி -
(முன்னாள் நாஷனல் வெஸ்ட் கிறேற் கல்லூரி)

**இந்தியா, பெங்களூர் சர்வகலாசாலையின் பட்டப்படிப்பு நெறிகள்**

B.B.M., B.Sc., B.C.A., B.Com+ Computer பட்டப்பின் படிப்பு நெறிகள் M.B.A., M.Sc., M.C.A.2004 ஏப்ரல் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கருத்தரங்கு இடம்பெறும். அதேயிடத்தில் 25ஆம மற்றும் 26ஆம் திகதிகளில் காலை 11மணி முதல் மாலை 5மணி வரை அனுமதிகள் வழங்கப்படும்.

★ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 261 மாணவர்கள் மற்றும் 41 பிறநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்வி கற்கும் வாய்ப்பு.

★கடந்த 10ஆண்டுகள் கால இடைவெளியில் இக்கல்லூரியில் கற்ற ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 250மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுளளனர்.

★கருத்தரங்கில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பதிவுக்கட்டணமின்றிப் பதிவுமேற்கொள்ளவும், புலமைப்பரிசில் சலுகை, கட்டணக்கழிவு மற்றும் தவணைமுறைக் கட்டணச் சலுகை ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள இயலும்.

★2004ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும், பரீட்சை முடிவுகளை எதிர்பார்க்கும் நிலையில் அனுமதிக்கான ஒதுக்கீடு கோர இயலும்.

★அனுமதி ஒதுக்கீட்டுக் கட்டணம் 400அமெரிக்க டொலர்கள்.

★மேலதிக விவரங்களை இணையத் தளத்தில் பெறமுடியும்.

★இணையத்தளமுகவரி
www.nfg College.com

★மின்அஞ்சல் மூலமும் விண்ணப்பிக்கலாம்.

★மின்அஞ்சல்முகவரி
nfgc@bgl.vsnl.net.in

22.04.2004ஆம் திகதி மாலை 10.30 மணிக்கு "ஐ" அலைவரிசையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியினைத் தவறவிடாதீர்கள்.

**கொம்பனி செக்கிரற்றேறியல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட**

Company Secretarial Services (Pvt) Ltd
இலக்கம்: 285C-1/1,
ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை,
நுகேகொட.
தொலைபேசி இலக்கம்:
(C-34529) 011-2854438.


## ஐந்தாவது பிறந்த நாள் வாழ்த்து

20.04.2004

HAPPY



BIRTHDAY

வரணியைச் சேர்ந்த சிவகுமார் - தேவமலர் தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
**நாகநர்த்தனன்**

இன்று(20.04.2004)செவ்வாய்க்கிழமை தனது ஐந்தாவது பிறந்த நாளை வரணியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை லண்டனில் இருக்கும் அன்பு அப்பா மற்றும் அம்மா, ரவீந்திரராசா குடும்பம், ரங்கன் சித்தா,டோகா தவம் சித்தா, வரணியில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, மாமன்மாரான உதயன், சிவா, விஷ்ணு, குமரன், தீபன், மேதா அன்ரிமாரான மங்களா, துர்க்கா, தாசன் மாமா, லோஜி அத்தை குடும்பம் மற்றும் வரணி அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமாரான றஞ்சன், நந்தன், வசந்தன், றமணன் மற்றும் பருத்தித்துறை இராசதுரை குடும்பம் ஆகியோர் இறைவன் அருளால் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

கரம்பைச் குறிச்சி, வரணி. (31014)(16-17-18) K.சிவா (மாமா)


**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS,
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-34221)


## நெஞ்சகலா ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**மேனகா சின்னத்துரை**
(மதி)

| மலராக மடியில் | விதையாக மண்ணில் |
|---|---|
| 08.09.1980 | 17.04.1999 |

திதி: 20.04.2004 (பிரதமை)

படிப்புக்கோர் மேனகா
பண்பிலும் பாசத்திலும் மதி
தேசத்தின் விடியலுக்காய் தமிழழகி என
பத்தொன்பது ஆண்டுகளில் பலராலும்
போற்றப்பட்டு பரமன் பாதம்
தேடிச்சென்றாய்
ஆண்டுகள் ஐந்து சென்றதம்மா ஆறுமோ
எம்துயரம்
ஐந்தென்ன ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும்
எம் வாழ்வு முடியும் வரை உன் நினைவில்
வாழ்ந்திடுவோம்.

என்றும் உன்நினைவுடன்:
அப்பா, அம்மா, தங்கை, தம்பி,
உறவினர்கள்.

அரியாலை,
யாழ்ப்பாணம். (30900)(16-17-18)




# இயேசு அழைக்கிறார்

"ஜீவவசனமும் நாதமும்"

பத்மஸ்ரீ சின்ன [illegible] நாதஸ்வர வித்துவானின் பேரன் **ஷேக் பவுள் சின்ன காசீம்** அவர்களின் விசேட இசைக்கச்சேரி

காலம்: நாளை 21.04.2004 முதல் 25.04.2004 வரை மாலை 4.00 மணிக்கு.

இடம்: அசெம்பிளி ஒப்கோட் (தேவசபை) 14,ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம்

நண்பனைப்போல ஆலோசனை தருபவர், தகப்பனைப்போல சீர்திருத்து செய்பவர், தாயைப்போல அரவணைப்பவர். இயேசு உங்களை அழைக்கிறார்.

(30906-[illegible]37)

*இது ஒரு மாவட்ட வைத்தியசாலையின் கதை வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு எனும் இரு பெரும் பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் சுமார் ஒன்றரை லட்சம் மக்களின் வைத்திய மையமாக விளங்கும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இன்றைய நிலை தொடர்பான ஒரு பார்வை விரிப்பு இது. செய்ய வேண்டியவற்றைச் செய்யாதிருப்போருக்காகவும், சொல்ல வேண்டியவற்றை சொல்லாதிருப்போருக்கும மக்கள் சேவையே மகேசன்சேவை என வாயளவில் உரைக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஆக வேண்டியவற்றுக்கு அழுத்தம் கொடுக்காமல் ஆசனங்களில் மட்டும் அமர்ந்திருக்கும் அதிகாரிகளுக்கும் இது சமர்ப்பணம். இந்தக் கதை இன்று நேற்றல்ல பன்னிரண்டு வருடங்களாகத் தொடர்ந்து வருகிறது.*

*இன்னும் தொடருமா? இனியும் தொடருமா?*

# வலிகாமத்தின் குடிமகன் எழுதுவது...

# இத்தால் நீங்கள் அறிவது...

சுமார் ஒன்றரை லட்சம் மக்களின் வைத்திய மையம் இது. வலி. வடக்கு, வலி. தெற்கு ஆகிய இரபெரும் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள ஒரே ஒரு மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை வைத்தியசாலை. நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதம் கிராமங்களையும் கிராமப்புற மக்களையும் கொண்ட இப்பிரதேசங்களின் சாதாரண ஏழை மக்களின் நோய்களுக்கும் பிணிகளுக்கும் அபயமளிக்கின்ற ஆபத் பாண்டவனாக மிளிர்வது இந்த வைத்தியசாலை.

உடல் நோயாளர்களுக்கு மட்டுமன்றி உள நோயாளர்களுக்கும் சிகிச்சையளிக்கின்ற இலங்கையின் பிரசித்தி பெற்ற உளநல சிகிச்சை மையங்களில் இதுவும் ஒன்று .

இதன் இன்றைய நிலை.....

தெல்லிப்பழை சந்திக்கருகில் தன் செந்தக் கட்டடத்தில் ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, சிறுவர் விடுதி, மகப்பேற்று விடுதி, உளநோயாளர் விடுதி, எக்ஸ்ரே பிரிவு, பற்சிகிச்சை பிரிவு, சிறு சத்திரசிகிச்சைப் பிரிவு அவசர அனுமதிப் பிரிவு என சகல வசதிகளுடன் இயங்கிய வைததியசாலை இது. 278 கட்டில்கள் இந்த வைத்தியசாலையில் அன்று பயன்பட்டன.

இன்று 120 கட்டில்களை மட்டும கொண்ட 5 சிறு விடுதிகளுடன் அரைவாசி சேதமடைந்து இடிந்து அழிந்த



டாக்டர் **வாசுதேவா**
**முயற்சிகள் பயனளிக்கவில்லை**

நிலையிலுள்ள தனியார் கட்டடத் தொகுதியொன்றில் இயங்கி வருகிறது.


உண்மை நிலையை ஆராயும் பொருட்டு அந்த வைத்தியசாலைக்கு நேரில் சென்ற பொழுது பல அதிர்ச்சி தரும் உண்மைகள் காத்திருந்தன. முதலில் வைத்தியசாலையில் பௌதிக, மனித வள நிலைமை பற்றி அறிந்துகொள்வதற்காக வைத்தியசாலையின் நிர்வாக அலுவலர் எ.கே. பாலசுந்தரம் அவர்களைச் சந்தித்த போது அவர் கூறினார்.

"வைத்திய சாலையின் சொந்தக் கட்டடப் புனரமைப்புக்கென உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள கட்டடத் தொகுதியில் பல மில்லிய ரூபா நிதி ஒதுக்கீடு இவ்வருடமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

"ஆனால், சொந்தக்கட்டடம் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளதால் அதனைப் புனரமைத்து இயக்கமுடியாதுள்ளது. கட்டடங்களை மீளப்புனரமைக்கவும் பாதுகாப்புத்தரப்பு இதுவரை அனுமதிக்கவில்லை. சென்ற ஆண்டும் பெருமளவு நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றும் நிதி பயன்படுத்தப்படாததால் திரும்பிச் சென்றது. இவ்வாண்டும் அந்த நிலைமை ஏற்படும்போல் தெரிகிறது" - என்று கவலையுடன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

கட்டட வசதியின்மை, இங்கு நாங்கள் எதிர்நோக்கும் மிகப்பிரச்சினையாக உள்ளது. இருக்கின்ற கட்டடங்களை புனர் அமைத்துப்பயன் படுததுவதற்குக் கூட இது ஒரு தனியார் கட்டடத் தொகுதி என்பதால் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள் இல்லை. சில பொது நிறுவனங்கள், பொலீஸார், தனிநபர்கள் போன்றோரின் உதவியுடனேயே சில புனரமைப்பு வேலைகளை இங்கு செய்து வந்திருக்கிறோம். வைத்தியசாலை ஆளணி வளத்தைப் பொறுத்தமட்டில் 14 வைத்திய உத்தியோகத்தர்களும் 3 வைத்திய நிபுணர்களும் தேவை. ஆனால், தற்போது 4 வைத்திய அதிகாரிகளும் ஒரு மீள் நியமனம் செய்யப்பட்ட வைத்திய நிபுணருமே கடமையில் உள்ளனர். வைத்திய தாதிகள் 56 பேர் தேவையாக உள்ளபோதிலும் 14 பேரே கடமையில் உள்ளனர். எக்ஸ்ரே வசதிகள் அவசியம் தேவையாக உள்ளன. ஆனால், அதற்கான வசதிகள் வழங்கப்படவில்லை. மேலும் வழங்கப்பட்டால் கூட அதனை வைத்து இயக்குவதற்கான கட்டட வசதிகள் இல்லை. எக்ஸ்ரே தேவைகளுக்காக யாழ்ப்பாண வைத்தியசாலையையே நம்பி இருக்கின்றோம். எக்ஸ்ரே எடுப்பதற்காக நோயாளிகளை அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும்போது அவசர சிகிச்சைக்காக அல்லது மேலதிக சிகிச்சைக்காக இங்கு அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் அனுப்ப வேண்டிய நோயாளிகளைக்கூட உடனடியாக அனுப்புவதில் சிரமமும்



பழுதடைந்த மூலைக்குள் முடங்கிய எக்ஸ்ரே சாதனம்.

தாமதமும் ஏற்படுகின்றது. ஒரேயொரு அம்புலன்ஸ் மட்டுமே இருப்பதும் இதற்கான காரணம் - என்றார் அவர்.

அவருடன் கதைத்து விட்டு நோயாளர் விடுதியை நேரடியாகப் பார்வையிடச் சென்றோம். வைத்தியசாலை சிற்றூழியர்களால் ஓரளவு சுத்தமாக இவை பராமரிக்கப்படுகின்ற போதிலும புனரமைப்பு செய்யப்படாத நிலைமையில் அழுக்கேறிய சுவர்களுடனும் தளபாடங்களுடனுமே வீடுதிகள் காணப்படுகின்றன. மலசலகூடங்கள் எவையும் பாவனைக்குரிய நிலையில் இல்லை. உண்மையில் இவை பாவனைக்குகந்தவை இல்லை என்பதை நாம் அங்கு சென்றவேளை விடுதிக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வைத்திய அதிகாரி வாசுதேவாவும் ஒப்புக்கொள்கினறார். அவர் சமீபத்தில் வைத்தியசாலையில் கடமையாற்ற வந்து தெல்லிப்பழையில் உள்ள இளைஞர் புனர்வாழ்வு நிலைய விடுதியில் தங்கியிருந்து சேவையாற்றிவருகின்றார். கொழும்பைச்சேர்ந்த இவ் வைத்திய அதிகாரி தங்குவதற்காக வைத்தியசாலையில் விடுதிகளோ அறைகளோ அற்றநிலையில் தடுத்துவைக்கப்பட்ட இளைஞர் புனர்வாழ்வு பெறும் நிலையத்தில் தங்கியிருக்கிறார்.

அவர் கூறுகின்றார் -

"சிறிய அளவில் சத்திர சிகிச்சைகளை செய்யக்கூடிய ஆற்றல் என்னிடம் உண்டு. அந்தவகையில், சிறிய அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளககூடிய ஒரு சிகிச்சைக் கூடத்தை அமைப்பதற்காக 6 மாதங்களாக முயற்சித்து வருகின்றேன. ஆனால், முடியவில்லை. இங்கு அதற்கான பௌதிக வளங்கள இல்லாமையே அதற்குக் காரணம் தற்போது உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இயங்கிவருகின்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையோடு சத்திர சிகிச்சை கூடத்தை இணைத்து நடத்த முயற்சித்துவருகின்றோம். படையினரும் அதற்கு அனுமதிப்பதற்கு உடன்பட்டுள்ளனர். ஆனால் இன்னும் இது நடைமுறை சாத்தியமாக வில்லை" - என்று தனது ஆதங்கத்தைக் கொட்டினார் அவர்.

தொடர்ந்து வைத்தியசாலையின் பற்சிகிச்சை பிரிவினை பார்வையிடச் சென்ற போது அதற்குப் பொறுப்பான வைததிய அதிகாரி சுரேஸ் பின்வருமாறு தனது கருத்துக்களைக் கூறினார். (இவரும் புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரி)

"இங்கு ஒரு பழைய காலால் இயக்கப்படும் இயந்தித்தைப் பயன்படுத்தியே சிகிச்சைகளை மேற்கொண்டுவருகின்றோம்.



புத்தம் புதிதாய் 3 வருடங்கள் காத்திருக்கும் பற்சிகிச்சை இயந்திரம்



மாவட்ட வைத்தியசாலையின் அடுப்பறை.

பற்சிகிச்சைப் பிரிவுக்கென வழங்கப்பட்ட பல லட்சம்ரூபா பெறுமதியான புதிய இயந்திரம், பூட்டிய அறைக்குள் மூன்று வருடங்களாக முடங்கிக் கிடக்கின்றது. இநத இயந்திரத்தைப் பொருத்தித்தரக் கோரி நானும் எனக்கு முன் கடமையாற்றிய வைத்திய நிபுணர்களும் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு பல கடிதங்களை அனுப்பிவைத் துள்ளோம். இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.


மேலும் இந்த இயந்திரத்தை வைத்தியசாலை சொந்தக கட்டடத்துக்குச் சென்றதும் பொருத்துவதாகக் கூறுகினறார்கள். அது எப்போது சாத்தியப்படும்? இப்போதே இந்த இயந்திரத்தின் ஒரு பகுதியைக் காணவில்லை. மேலும் எலிகள் நாளாந்தம் இயந்திரப் பெட்டியைப் பதம் பாத்து வருகின்றன.

இந்த இயந்திரத்தைப் பொருத்துவது தொடர்பாகவும் பற்சிகிச்சை கூடத்தைப் புனரமைப்பது தொடர்பாகவும் பல்வேறு பொது நிறுவனங்கள் அமைப்புக்களுடனும் ஏன்? இம்முறை தேர்தலில் போட்டியிட்ட ஒரு பிரபல வேட்பாளரிடமும்கூட கேட்டுப பார்த்தேன். வளங்கள், வசதிகள் இருநதும் எவரும் இதற்கு உதவவில்லை என்று வேதனைப்படுகின்றார் அவர்.

வைத்தியசாலையின் சமையற்கூடத்தைச் சென்று பார்வையிட்ட பொழுது அதிர்ச்சியாக இருந்தது. ஏறத்தாழ நாளாந்தம் 100 நோயாளர்களுக்கும் (உளநோயாளர் உட்பட) 30 வரையான வைத்தியசாலை பணியாளர்களுக்கும் உணவுதயார் செய்கின்ற வைத்தியசாலை சமையற்கூடம் உடைந்த சீற் துண்டுகளால் மறைக்கப்பட்ட ஒரு கொட்டகைக்குள் இயங்கிவருகின்றது. மழை வந்தால் மழை நீர் அடுப்புவரை வரும் காற்றுடன் மழையானால் கொட்டகைக்குள் நின்று சமைக்கவே முடியாது என்று தனது சிரமங்களைக்கூறுகிறார் வைத்தியசாலை சமையற்கூடத் தொழிலாழி ஒருவர். சமையலறையின் அநத நிலைமையைக் கமராவுக்குள் பதிவு செய்துகொண்டு அப்பாலுள்ள தெல்லிப்பழை வைத்தியசாலையிலுள்ள முக்கிய அலகான உள நோயாளர் பிரிவிற்குச் சென்றோம்.

இங்கு ஆண் உள நோயாளர் விடுதியிலும், பெண் உள நோயாளர் விடுதியிலுமாக 40 பேர் வரை தங்கியிருக்கிறார்கள். 20 பேர் வரை மட்டுமே தங்கக்கூடிய இவ்விரு விடுதிகளிலும் 40 பேர அடைக்கப்பட்டுள்ளார்கள் எனபதே உண்மை. உளநல சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளிற்கு இவ்வாறான சூழல் எத்தகைய பொருத்தமானது என்பது கேள்விக்குறியே.

மேலதிக உள நோயாளிகள் அனுமதிக்கப்படும்போது பூரண சிகிச்சை பெறாமலேயே பல உளநோயாளர்கள் வெளியேற்றப்படுகின்றார்கள் என்கிறார் இவ்வைத்தியசாலையில் பணியாற்றும் உளநல மருத்துவ அணியைச்சேர்ந்த ந.ஞானசூரியர். அவர் மேலும் கூறுகையில், இங்குள்ள நோயாளர்களிற்கு உளநல மேம்பாட்டை ஏற்படுத்துவதற்காக ஆண், பெண்களுக்கென தனித்தனியான இரு தொழிற்பாட்டறைகள் தேவை. ஆனால், தற்போது ஓர் அறையை வைத்தே செயற்பட்டுவருகிறோம். இது சிறப்பான பயனைத்தராது. மேலும் நோயாளர்களின் உளநல சிகிச்சைக்காக உளவியலாளர்கள், உளவியல் சேவையாளர்கள், உதவியாளர்கள் என்போர் தேவை. ஆனால, இந்த வைத்தியசாலைக்கு அரசு அத தகையோரை நியமிக்கவில்லை. இந நிலையில் வெளிநாட்டு நிறுவனங்கள் சிலவற்றின் நிதி உதவியுடன் ஓர் உளநலச் சேவையணி செயற்பட்டு வருகிறது. தற்போது இந்த அணிக்கான நிதி உதவிகளும் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இது உளநலப் பிரிவின் முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகவே அமையும் - என்று கூறுகிறார் இந்த உளநலச் சேவையாளர்.



உளநல சேவையாளர்
**ஞானசூரியர்**
**வசதியீனங்களால வாடுகிறோம்**

வைத்தியசாலை விடுதிகளைப் பார்வையிட்ட பின்பு வெளிநோயாளர் பிரிவினை அவதானித்தோம். அங்கு 'வைத்தியர்களிடம் நோயாளிகள் செல்லும் நேரத்தைக் காட்டிலும் மருந்தெடுப்பதற்காக நோயாளிகள் காத்திருக்கும் நேரம் அதிகமானதாகவே இருக்கின்றது. மேலும், மருந்து வழங்கும் இடத்தில் 'முதியோர்களுக்காக' என அடையாளமிடப்பட்ட வாசல் மூடியே கிடக்கிறது. முதியோர், சிறுவர், தாய்மார்கள் அனைவருக்கும் ஒரே வரிசையே. பத்தாவதாக நிற்கும் ஒரு நோயாளி மருந்தெடுக்க 25 நிமிடங்கள் வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. (மூன்று தினங்கள் அவதானித்து மதிப்பிடப்பட்டது) இந்நிலைமை குறித்து வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி சி.சிவராணி கூறும்போது, எமது வைத்தியசாலைக் கடமைக்காக 5 மருந்தாளர்கள் வரை தேவை. ஆனால், இருவரே கடமையில் உள்ளனர். இதனால் தான் இந்நிலைமை நீடிக்கிறது - என்கிறார்.

இவற்றைவிட, பெரும் நிர்வாகப் பிரச்சினையாக இந்த வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துகள் தேவையான அளவில் உரிய காலப் பகுதியில் கிடைப்பதில்லை எனக் கூறப்படுகிறது. 10 ஆண்டுகளுக்கு முனனிருந்த கோட்டாவின் அடிப்படையிலேயே இப்போதும் வைத்தியசாலைக்கு மருந்துகள் வழங்கப்படுகின்றன. ஆனால், இன்று இங்கு சிகிசசை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகிவிட்டது. இதனால், நோயாளிகளுக்குப் போதியளவில் மருந்துகளை வழங்கமுடியாமல் திண்டாடுகிறது வைத்தியசாலை நிர்வாகம்.

இத்தகைய நிலையில் ஒரு மாவட்ட வைத்தியசாலை பல வருடங்களாக இயங்கிவருகிறது. இந்த வைத்தியசாலையை நம்பி லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையும் சுழன்று வருகிறது. இத்தகைய சீர்கேடுகளினால் விளையும் துன்பங்களை மக்கள் மட்டுமே சுமக்க வேண்டுமென்பது மக்கள் பிரதிநிதிகள் அதிக கவனமாயிருப்பது ஏன்? தனக்காக வாக்களித்த வாக்காளனுக்காக மக்கள் பிரதிநிதிகள் இனி ஆற்றப்போகும் பணி என்ன? வலி. வடக்கில் ஆற்றப்பட வேண்டிய பணிகளின் பட்டியலில் முதலிடத்தில் இந்த வைத்தியசாலை அபிவிருத்தி பணி காத்துக்கிடக்கிறது.

வலி. வடக்கின் வடுவில் இந்த வைத்தியசாலை ஓர் உதாரணம் மட்டுமே. இன்றும் இங்கு ஏராளம் இருக்கிறது. எல்லாம் அவர்களின் கவனத்திற்காகவே.

**ஆர்.மார்க் அன்ரனி**


தேவராஜா-பதுளை


எம்.ஜி.எஸ்.சமரநாயக்க
பதுளை


டி.ஆர்.பி.சார்லி
பதுளை






தாரகா தர்ஷனி-கண்டி


ஆர்.சித்ரா-வவுனியா


ஏ.வேலமாலிகதன்
வவுனியா


கே.ரத்னேஷ்வர
வவுனியா

# சமாதானத்தின் மக்கள் குரல்

"சமாதானத்தை முதலில் மனித மனங்களில் கட்டியெழுப்ப வேண்டும். அங்கு கெட்ட சமாதானமோ நல்ல யுத்தமோ கிடையாது. சமாதானம் எந்தப் பிளவுகளையும் ஏற்படுத்தாது. இன, மத, அரசியல் வேறுபாடுகளின்றி எழுப்பப்படும் குரலே நிரந்தர சமாதானத்தின் பாதை.

பதுளை

எமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் எந்த நேரத்திலும் கிடைக்குமாக இருந்தால் அதுதான் இவ்வுலகில் வாழ்வதற்கு அனைவருக்கும் இருக்கும் மிகப்பெரிய உரிமையாகும். குடும்பத்திலிருந்தே இது ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான் எமது எதிர்காலத்தை சமாதானம் ஆட்சி செய்யும்.

கொழும்பு

அனைத்து மக்களுக்கும் சுய கௌரவம் உள்ளது. அதனுடன் போட்டியிடுவதல்ல மனிதநேயம். யுத்தப் பீதியிலிருந்து விடுபட முதலில் மனித மனங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். அதில்தான் சமாதானம் பற்றிய பொறுப்பு இருக்கிறது.

கண்டி

20 வருட காலமாக யுத்தம் எமக்குக் கொடிய அனுபவங்களையே தந்தது. இந்த யுத்தத்தால் நாம் அனாதைகளானோம். எனினும் எமது பிள்ளைகளுக்குச் சமாதானத்தின் மூலம் நாளை நல்லதொரு எதிர்காலம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

வவுனியா"

சமாதான மேசை என்பது 2004 பொதுத் தேர்தலை மையமாக வைத்து சமாதானம் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலாகும். சமாதானம் பற்றிய உங்களின் சுதந்திரமான கருத்துக்கள் யோசனைகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதே சமாதான மேசையின் முக்கிய நோக்கமாகும். இதுவரை 16 மாவட்டங்களில் சமாதான மேசை நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. பதுளை, கொழும்பு, கண்டி, வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் சமாதானத்தைப் பற்றி தெரிவித்த கருத்துக்களே இங்கு சமாதானத்தின் மக்கள் குரலாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

☑ பதுளை ☑ கொழும்பு ☑ கண்டி ☑ வவுனியா

சமாதானம், ஜனநாயகம் அல்லது நல்லாட்சி பற்றிய உங்கள் எண்ணங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி 12/14 புராண விகாரை வீதி கொழும்பு - 06 பெக்ஸ் - 011 - 281 9064 ஈ-மெயில் peoplesvoice@info-share.org


மல்காந்தி வீரசேகர
பதுளை


வேலு முருகையா
பதுளை








ஜயசிங்க எல்.உபாலி
கண்டி




ரீட்டா-வவுனியா


உபாலி ஏக்கநாயக்க
வவுனியா

# பளையில் மீளக்குடியமர்ந்த மக்கள் மருத்துவ வசதிகள் இன்றிச் சிரமம்

தென்மராட்சி,ஏப்.20

பளைப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும், பளை ஆஸ்பத்திரி இன்னமும் முழுமையாக இயங்காததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு பிற்பகலில் மூடப்பட்டதும் அங்கு கடமையாற்றும் உதவி மருத்துவ அதிகாரி சென்று விடுவதால் அதன் பின்னர் அவசர நோய்க்கு உள்ளாகும் நோயாளர்கள் தனியார் வாகனங்கள் மூலம் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் பளை ஊடாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றனர்.

பளை ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் இருந்தும் டாக்டர் இல்லாததால் அவசர நோயாளர்களை உடனடியாகச் சிகிச்சை வழங்கி யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடிவதில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

பளை ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லாத வேளையில் அம்புலன்ஸ் மூலம் நோயாளர்களை எடுத்துச் சென்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில ஒப்படைத்து விட்டுத்திரும்ப சுகாதார பகுதியினர் ஏற்பாடு செய்யமாட்டார்களா என அப்பகுதி மக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

பளைப் பிரதேசத்தில் பாம்புக் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகமென்பதால் அவ்வாறான நோயாளர்களையும் ஏனைய அவசர நோயாளர்களையும் பளையிலிருந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு இரவு வேளையில் கொண்டு செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதார சேவைகள் மாகாணப் பணிபாளர்களைக் கோரியுள்ளனர். (ஐ-117)



சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம், சில்லாலை தெற்கு கிராம அலுவலராகப் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள தி.நித்தியானந்தனுக்கு அண்மையில் சேவை நலன் பாராட்டு விழா ஒன்றை நடத்தியது. சங்கத்தலைவர் அ.யோ.இமானுவேல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு அ.ப.அன்ரனிப்பிள்ளை அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் விழா நாயகர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வலி.தென்மேற்கு செய்தியாளர்)*

# ஜனாதிபதி வாக்குறுதியை காப்பாற்றத் தவறிவிட்டார்!

## அர்ஜுனா ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கு விளையாட்டுத்துறை அமைச்சைத் தருவதாக வாக்குறுதியளித்திருந்தார் என்றும் ஆனால், தேர்தலுக்குப் பின்னர் தமது வாக்குறுதியை நிறைவேற்ற அவர் தவறிவிட்டார் என்றும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுனா ரணதுங்க கூறியிருக்கிறார்.

2001ஆம் ஆண்டு ஜனாதிபதியும் அமைச்சர் மங்கள சமரவீரவும் கேட்டுக்கொண்டதின்பேரில் பொதுமக்கள ஐக்கிய முன்னணியில் சேர்ந்தேன். அந்த வருடத்தில் நடந்த தேர்தலில் அக்கட்சி தோற்கப்போகிறது என்பது தெரிந்திருந்தும் அவர்களின் அழைப்பை ஏற்று கட்சியில் இணைந்து கொண்டேன்.

விளையாட்டுத்துறைக்கு என்னால் கூடிய சேவையை ஆற்றமுடியும் என்று நம்பினேன் ஆனால் இப்பொழுது அவையெல்லாம் வீணாய்ப்போய்விட்டன. எனக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டது என்று ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நம் நாட்டு கிரிக்கெட் துறையில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. அவைகளைக் களைவதற்கு நான் விரும்பினேன். ஆனால், இப்போதைய சூழ்நிலையால் அந்தச் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காமல் போய்விட்டது என்று கூறியுள்ளார் அவர்.

பிரதி அமைச்சர் பதவி ஒன்று தமக்கு வழங்கப்பட்டதாகவும், இது ஏதோ ஒரு பதவி வழங்க வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட காரியம் என்றும் கூறிய அர்ஜுனா ரணதுங்க, அப்பதவியைத் தாம் ஏற்க மறுத்துவிட்டதாகவும் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்குச் சேவையாற்றப்போவதாகவும் கூறியுள்ளார். (ப)

## யோகாசன பயிற்சி வகுப்பு

சாவகச்சேரி,ஏப்.20

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலைய மண்டபத்தில் யோகாசன வகுப்புகள் கடந்த 13ஆம் திகதிமுதல் நடைபெற்றுவருகின்றன.

இதற்கான சம்பிரதாயபூர்வ வைபவம் கடந்த 18ஆம் திகதி நிலையத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த யோகாசனப் பயிற்சி வகுப்புகள் யோகக் கேந்திரா அனுசரணையுடன் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 4 மணிமுதல் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பயிற்சி வகுப்பில் பொது மக்கள், மாணவர்கள் எனப் பலர் பங்குபற்றி வருகின்றனர். (ஐ-8-31)

# சாவகச்சேரி தபாலகத்தில் பணிகளை முன்னெடுக்க அஞ்சல் அதிபர்கள் இல்லை

## சிரமங்களின் மத்தியில் மூவர் மட்டுமே பணியில்

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் அஞ்சல் அதிபர்கள் பற்றாக் குறையாக உள்ளனர் இதனால் பொது மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அஞ்சல் அலுவலகத்தில் பல பணிகள நடைபெறுகின்ற போதிலும், கருமபீடத்தில் இரண்டு அஞ்சல் அதிபர்களே கடமையாற்றுகின்றனர். பொது மக்கள் அதிகமாகக் கூடும் வேளைகளில் அலுவலக பரதம அஞ்சல் அதிபரும் இணைந்து கடமையாற்றுகிறார்.

அஞ்சல் அலுவலகத்தில் வழமையான பணிகளுடன் மேலதிகமாக பொலீஸாரால் விதிக்கப்படும் தண்டப்பணம் ஏற்பது, பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்குவது, மின்கட்டணம் பெறுவது [illegible] வழங்குவது, விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவது, தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புகள் பெறுவது, மீளளிப்பது போன்ற பணிகளையும் - இந்த மூன்று அஞ்சல் அதிபர்களுமே பெரும் சிரமத்தின் மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை -

அஞ்சல் அலுவலகம் மூலம் அனுப்பப்படும் புத்தகங்கள் மற்றும் பார்சல்களை நிறுப்பதற்கு அஞ்சல் அலுவலகத்தில் தராசு இல்லாததால் அவை அங்கு ஏற்கப்படுவதில்லை எனவும் அதனால் பார்சல்கள் அனுப்புவதற்கு வேறு அஞ்சல் அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

50 லட்சம் ரூபா செலவில் அஞ்சல் அலுவலகம் புனரமைக்கப்பட்ட போதிலும் அலுவலக கருமபீடத்திற்குரிய தளபாடங்கள், லாச்சிகள் இன்னமும் பொருத்தப்படவில்லை. இதனால், அங்கு பணியாற்றும் அஞ்சல் அதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதையும் காணமுடிகிறது. (ஐ-117)

# புதிய சபாநாயகர் தெரிவுதான் நாடாளுமன்றின் முதற்பணி

எதிர்வரும் வியாழனன்று புதிய நாடாளுமன்றம் முதல் தடவையாகக் கூடும்போது அதன் முதல் பணியாக சபாநாயகர் ஒருவர் தெரிவுசெய்தல் இடம்பெறும். எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இன்னுமோர் உறுப்பினரின் பெயரை சபாநாயகர் பதவிக்கு முன்மொழியலாம். அப்பெயர் இன்னோர் உறுப்பினரால் வழிமொழியப் பெறவேண்டும்.

ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப் பெற்று வழிமொழியப் பெற்றால் அவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் அறிவிக்கப்படுவார். ஒருவரின் பெயருக்கும் அதிகமான பெயர்கள் முன்மொழியப் பெற்று வழிமொழியப்பெற்றால் வாக்கெடுப்பு நடைபெறும். சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்குச்சீட்டு வழங்கப்படும். அதில் அவர் தாம் சபாநாயகராக யார் வரவேண்டும் என்று விரும்புகிறாரோ அவரது பெயரை எழுதுவார். பின்னர், இந்த வாக்குச் சீட்டுகள் சேகரிக்கப்பட்டு எண்ணப்படும். செயலாளர் நாயகம் வாக்கெடுப்பின் முடிவை அறிவிப்பார். இதன் பிறகு உடனடியாகவே பிரதி சபாநாயகர் ஒருவரும், குழுக்களின் தலைவர் ஒருவரும் மேற்கண்ட முறைப்படியே தெரிவுசெய்யப்படுவார்கள். ஆனால், இதற்கு புதிய சபாநாயகரே தலைமைவகிப்பார். (ப)

# மண் வளத்தையும் நீரையும் பாதுகாக்க கிருமிநாசனிகளை அளவாகப் பயன்படுத்துங்கள்!

## விவசாயிகளிடம் வலி.தெற்குப் பிரதேச செயலர் கோரிக்கை

வலிகாம்தெற்கு,ஏப்.20

அதிக அளவில் கிருமிநாசனிகளையும் இரசாயனப் பொருள்களையும் வாங்கினால் பரிசு கிடைக்கும் என்ற நோக்கத்துடன் விவசாயிகள் அவற்றை வாங்கக்கூடாது. எமது மணணும், நீரும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் இவற்றை அளவோடு வாங்கி உபயோகிக்க வேண்டும்.

குப்பிளான் விவசாயிகள் சம்மேளனத்தின் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வலி. தெறகு பிரதேச செயலர் சி.திருவாகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குப்பிளான் விவசாயிகள் சம்மேளன முன்றிலில் கிராமசேவையாளர் சோமநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் சிறந்த நீர் வளமும் மண்வளமும் நிறைந்த பூமியாக குப்பிளான் பிரதேசம் விளங்குகின்றது.

கூடிய உரத்தையும், கிருமி நாசினிகளையும் குடாநாட்டு விவசாயிகள் உபயோகிப்பதால் குடாநாட்டு நீரும், மண்ணும் மாசடைந்து வருகின்றன.

எமது பிரதேசத்தின் சிறப்பான மண்ணையும், நீரையும் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு நாம் கையளிக்க வேண்டும். இதற்காக உரத்தையும், கிருமிநாசினிகளையும் திணைக்கள ஆலோசனைகளைப் பெற்று அளவோடு பாவியுங்கள் - என பிரதேச செயலர் தமது உரையில் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்ததாவது:-

இப்பகுதியில் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் அமைந்ததன் மூலம் ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினைப் பகுதி விவசாயிகள் பெரிதும் பயனடைந்துள்ளார்கள்.

கிராமிய அடிமட்டத்திலுள்ள விவசாயிகளின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்யவே விவசாய சம்மேளனங்கள் அமைக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் 262 விவசாய சம்மேளனங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் 50 வீதமானவையே தமது கடமைகளைச் சரிவரச் செய்கின்றன.

மீளக்குடியமர்ந்தபோது எமது விவசாயிகளுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இருக்கவில்லை. விவசாய சம்மேளனங்களை நாம் நிறுவி, அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டோம். விதைநெல், விதை வெங்காயம், விதை உருளைக் கிழங்கு மற்றும் மண்வெட்டிகள் என்பவற்றை வழங்கினோம்.


காணி இடாப்புத் தயாரித்தல், உளளீடுகள் வழங்கல், கடன் வசதியளித்தல், விவசாயத் திட்டங்களை இனங்காணல், உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்தல் போன்ற தட்டங்களை சம்மேளனங்கள் ஊடாக முன்னெடுத்தோம்.

40 ஆயிரம் மண்வெட்டிகளை வழங்கினோம். 'சீடா' திட்டத்தின்கீழ் 2 ஆயிரத்து 500 நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கினோம்.

இவற்றால் உற்பத்தி அதிகரித்தாலும் விவசாயிகள் தமது உற்பத்திக்கேற்ற வருமானத்தைப் பெறமுடியாது போய்விட்டது. ஏ-9 பாதை திறந்த பின் போட்டிப் பொருளாதாரத்தில் பொருள்களைச் சந்தைப்படுத்த வேண்டியநிலை காணப்படுகிறது. உற்பத்திப் பொருள்களுக்கான செலவு அதிகரித்துள்ளது. கூலியாள்களைப் பெறமுடியாதுள்ளது. இருப்பினும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் எமது குறிக்கோளை அரச அதிபர் மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் மேற்கொண்டு நிறைவு செய்வோம். விவசாய சம்மேளனங்களை வலுவுள்ளதாக்குவோம்.

இந்த உள்ளீடுகள் விற்பனை நிலையத்துக்கான நிரந்தர கட்டடத்தை மிக விரைவில் அமைத்துக்கொடுக்க முயற்சி எடுப்போம் - எனக் கூறினார்.

அதிகளவு உள்ளீடுகளைக் கொள்வனவு செய்த விவசாயிகளில் தெரிவு செய்யப்பட்ட பத்து விவசாயிகளுக்குச் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன. (ஐ-152)




# போஞ்சிச் செய்கையாளருக்கு மேலும் சில ஆலோசனைகள்

கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையின் 'கமமும் புலமும்' பகுதியில் வெளியான 'நிறைவான புரதச் சத்துக்கு நீங்களும் நடுங்கள் போஞ்சி' என்ற கட்டுரை தொடர்பாக விவசாயப் போதனாசிரியர் க.ஜெகநாதன் மேலும் சில தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

அத்தகவல்கள் வருமாறு:-

★ வரண்ட வலயப பிரதேசமான யாழ் குடாநாட்டில் போஞ்சியை ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் இருந்து பெப்ரவரி மாத நடுப்பகுதி வரையான காலத்தில் விசேட கவனத்துடன் செய்கை பண்ண வேண்டும். ஏனைய காலப் பகுதியில் செய்கை பண்ணுவது அதிக பலனைத்தராது.

★ கொடிப் போஞ்சிக்கும் செடிப் போஞ்சிக்கும் நடுகை இடைவெளி வெவ்வேறுபட்டது.

செடிப்போஞ்சி 50x10 செ.மீ.

கொடிப்போஞ்சி - 60x45 செ.மீ.

★ யூரியாவை மட்டும் பாவிக்காமல் வேறு பல இரசாயனப் பசளைகளையும் பாவிக்கலாம். மனிதனின் ஆரோக்கியத்துக்கு சம உணவு எவ்வளவு அவசியமோ அவ்வாறே ஒரு பயிரின் வளர்ச்சிக்கும் சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனப் பசளைகள் அவசியமானவை.

★ போஞ்சியில் ஏற்படும் நோய்த் தாக்கங்கள் வேறு, பீடைத்தாக்கங்கள் வேறு. தற்போதைய காலநிலை போஞ்சிச் செய்கைக்கு ஏற்றதல்ல. எனவே, குடாநாட்டு விவசாயிகள் இவற்றைக் கவனத்தில் கொள்ளவும். (ஐ)

# எரிநோய் புகையிலையிலிருந்து மிளகாய்ச் செடிகளுக்கும் பரவலாம்

## வலி. தெற்கு விவசாயிகள் அச்சம்

வலிகாமம்தெற்கு,ஏப்.20

வலிகாமம் தெற்கு பிரதேசத்திலுள்ள தோட்டங்களில் புகையிலைச் செடிகளில் பரவியுள்ள எரிநோயின் தாக்கம் மிளகாய்ச் செடிகளுக்கும் பரவக்கூடும் என விவசாயிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

உடுவில், மருதனார்மடம், இணுவில் போன்ற இடங்களில் இம்முறை செய்கை பண்ணப்பட்டுள்ள புகையிலைச் செடிகள் மீது ஒரு வித எரிநோய் பரவிப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

புகையிலைச் செடிகளுக்கு அருகே உள்ள தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்ட உருளைக் கிழங்குச் செடியில் இருந்து இந்நோய் பரவுவதாக விவசாயிகள் கருதுகின்றனர்.

எரிநோயை ஏற்படுத்தும் பூச்சிகள், புகையிலைச்செடிகளில் பரவித்தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதைத் தொடர்ந்து அவற்றின் அருகே செய்கை பண்ணப்பட்டுள்ள மிளகாய்ச் செடிகளுக்கும் இந்நோய் பரவக்கூடும் என விவசாயிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

கமநலசேவை நிலைய அதிகாரிகள், விவசாயத்திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் கவனத்துக்கு இந்நோய் பற்றிய நிலைப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

அதிகாரிகள் விரைந்து செயற்படாவிடின் உருளைக்கிழங்கு, புகையிலை போன்றவற்றில் ஏற்பட்ட பாதிப்பைப் போல மிளகாய்ச் செய்கையிலும் பாதிப்பு ஏற்பட்டு நட்டம் ஏற்படக் கூடிய நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை கொண்டுள்ளனர். (ஐ-152)

# The Barbara Mulvaney Computer Training Centre

123, Temple Road, Jafina T.P.No - 222 5971

## விடுமுறைக் கால வகுப்புக்கள்!

பாடசாலை விடுமுறையை முன்னிட்டு எமது நிறுவனத்தில் இம்மாதம் 30ம் திகதி முதல் விசேட கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

*Diploma in Ms Office (4 Months)*
*Diploma in Desktop Publishing (4 Months)*
*Diploma in Kids Course (1-2 Months)*
*Certificate of Internet & E-mail (2 Months)*

**சகல துறைசார் நிறுவனங்களுக்கும்:-**

உங்கள் நிறுவனங்களைப்பற்றிய சகல விபரங்களையும் இணையத்தினூடாக மக்களுக்கு அறியத்தர விரும்புபவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். உங்களுக்கென்று பிரத்தியேகமாக உங்கள் விருப்பப்படி இணையத்தளத்தினை (Web site) வடிவமைத்துக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## தங்கள் சேவையை அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் நலம்பெற வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்



இந்து கலாசார விவகார அலுவல்கள் முன்னாள் அமைச்சரும், தற்போதைய கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான

### திரு.தியாகராசா மகேஸ்வரன்

அவர்கள் கடந்த 27.03.2004 அன்று துஷ்டர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய துயரச் செய்தியைக் கேட்டு எமது சங்க அங்கத்தவர்கள் ஆகிய நாம் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம். இவர் அமைச்சராக இருந்த காலத்தில் எமது சங்கத்திற்கும், நிலையத்திற்கும் நிதியுதவி வழங்கியதை நினைவுகூர்கின்றோம்.

இவரது சேவையை நினைவுகூர்ந்து இவர் பூரண குணமடைய வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கமும்,
சங்கானை ஐக்கிய சனசமூக நிலையமும்.

ஓடக்கரை வீதி,
சங்கானை. (31060)(34-19-18)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றிய

### திருமதி விஜயலட்சுமி தங்கராசா

அவர்கள் கடந்த 17.04.2004 அன்று காலமானதையிட்டு நாம் மிகவும் துயருறுகிறோம். அவரது மறைவால் துன்பப்படும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாதியர் நலன்புரிச் சங்கம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

(31048)(34-19-18)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சீனித்தம்பி தங்கம்



சமரபாகு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி தங்கம் அவர்கள் நேற்று (19.04.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.சீனித்தம்பி (ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் தேவாமிர்தம், ஜீவாமிர்தம், ஞானாமிர்தம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் T.F.மனோகரன் (அதிபர்), வே.கருணாநிதி (விரிவுரையாளர்), க.சைவஇறைமணி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனகன், ரமணன், திவியா, சொலமன், நிமலன் (ஆசிரியர்), கமல், சுகிர்தா, றொபின்சன், ஹெலன், சுபவாசினி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.04.2004) திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சமரபாகு, வல்வெட்டித்துறை.* (31071)(34) - குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி நடேசு

**(உரிமையாளர், நியூ வசந்தா சலவையகம், நெல்லியடி)**



துனாய்ப் பிள்ளையார் கோயிலடி, அல்வாய் வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடேசு நேற்று (19.04.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2004) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துனாய்ப் பிள்ளையார் கோயிலடி,*
*அல்வாய் வடமேற்கு,*
*திக்கம்.* (31067)(34-18-19)

தகவல்:
ந.சிறிநாதன் (மகன்)
(வடமராட்சி வெண்மை வாணிப சங்க உபதலைவர்).

## செய்திக் கொத்து

### முட்டை விலை அதிகரிப்பு

குடத்தனை,ஏப்.20

குடத்தனைப் பகுதியில் கோழி முட்டையின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

இங்கு ஊர்க்கோழி முட்டை 8 ரூபா 50சதம் ஆகவும் பண்ணைக்கோழி முட்டை 8 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (ஐ-10-ரி)

### புனரமைப்புப் பணிகள் நிறைவுறும் நிலையில்

குடத்தனை,ஏப்.20

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்திருந்த மருதங்கேணி வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகள் நிறைவுபெறும் நிலையிலுள்ளன.

இந்த வைத்தியசாலைப் புனரமைப்புக்கான நிதியுதவியை 'நிகொட்' நிறுவனம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-10-ரி)

### கோழிகளுக்கு நோய்

குடத்தனை,மார்ச்.20

கடும்வெப்பநிலை காரணமாக குடத்தனைப் பகுதியில் கோழிகளுக்கு நோய்கள் ஏற்பட்டுவருகின்றன.

இதனால், இப்பகுதியில் கோழிகளின் இறப்புவீதம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-10-ரி)

### திருடர்களின் நடமாட்டம் அதிகரிப்பு

குடத்தனை,ஏப்.20

குடத்தனை கிழக்குப் பகுதியில் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இரவுவேளைகளில் வரும் இத்திருடர்கள் இருளாகக் காணப்படும் இடங்களில் நடமாடுவதாகவும் இந்த நடமாட்டத்தை யாரும் அவதானித்து விட்டால் அவர்கள் தலைமறைவாகி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இங்கு வாழும் மக்கள் இரவுப்பொழுதைப் பெரும் அச்சத்துடன் கழிக்கவேண்டியுள்ளது. (ஐ-10-ரி)

### வேப்பம்பூ பிடுங்க மரத்தில் ஏறிய சிறுவன் காயமடைந்தான்

தென்மராட்சி,ஏப்.20

வடகம் செய்வதற்கு வேப்பம்பூ பிடுங்க ஏறிய சிறுவன் தவறி வீழ்ந்து காயமடைந்தான். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி கெருடாவிலில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த இ.ரகுராசா (வயது11) என்ற சிறுவனே கை முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டான். (10-117)

### நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.20

கொழும்பு லயன்ஸ் கழகத்தின் நிதியுதவியுடன் யாழ். பொது நூலகத்திற்கு பொறியியல் கற்கைகள் தொடர்பான பெறுமதிவாய்ந்த புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகங்களைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ்மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம், நூலகர் எஸ்.தனபாலசிங்கம், யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோருடன் கொழும்பு - யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ஐ-10-ரி)

### அமைச்சர் மீது ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு,ஏப்.20

விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் திஸ்ஸவிதாரண மீது லங்கா சமசமாசக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க யோசித்துவருகிறது. கட்சி ஒழுங்குவிதிகளை பேராசிரியர் விதாரண மீறியிருப்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசில் பதவிகள் எதையும் ஏற்றுக் கொள்வதில்லையென்று கட்சி முடிவு செய்திருக்கும் வேளையில் அதற்கு மாறாக அவர் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக சமசமாசக் கட்சியின் மத்தியகுழு விரைவில் கூடவிருப்பதாகத் தெரியவருகின்றது. (ப)

## விளையாட்டுப் போட்டி

அச்சுவேலி வடக்கு கதிரொளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு ந.மதனசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வியலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.யோகராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10-11)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை **திருமதி ஞானாமிர்தம் சைவஇறைமணி** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தங்கம் சீனித்தம்பி அவர்களின்

மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை,
வல்வெட்டித்துறை.

(31070)(34-18-19)

## பதவி வெற்றிடம்

### மட்டுப்படுத்தப்பட்ட அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அனலைதீவு

எமது சங்கத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★பதவி: முகாமையாளர் 115/12 - 31/99

★சம்பள அளவுத்திட்டம்: 4250-80x10-90x10-5950
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

★தகைமைகள்: அ) 12 ஆவது சம்பளத்திட்டத்தில் 2வருட அனுபவம். அல்லது 13 ஆவது சம்பளத்திட்டத்தில் 4வருட அனுபவம்.
ஆ) கூட்டுறவுத் தராதர உயர்பிரிவு சித்தி அல்லது க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/வர்த்தக நிறுவனமொன்றில் 6வருட அனுபவமும்.

★வயதெல்லை: 18-45
தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளோருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கும் போது சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

★ தீவகப் பகுதியிலிருந்து விண்ணப்பிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ விண்ணப்பப் படிவங்கள் மேற்குறிப்பிடப்பட்ட விவரங்கள் உள்ளடக்கக் கூடியதாக சுயமாகத் தயாரித்து 30.04.2004ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு - தலைவர்,
ப.தெ.வள. அபிவிருத்திக் கூ.சங்கம்,
அனலைதீவு.

எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்,
அனலைதீவு ப.தெ.வள. அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
அனலைதீவு.

(31063)(34-19-18)

## வணிக ஜோதி

### 21 ஆவது மலர் வெளியீட்டு விழா

**இடம்:** கல்லூரி பிரதான மண்டபம்
**காலம்:** நாளை (21.04.2004)
புதன்கிழமை காலை 10.00 மணி.

தலைவர்: செல்வன் க.மதுசாந்தன்
பிரதம விருந்தினர்: **திரு.மா.சின்னத்தம்பி**
(தலைவர், கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: **திரு.யோ.ரவீந்திரன்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)
தொடக்கவுரை: **திரு.வி.மாணிக்கம்** (அதிபர்)
மலர் வெளியீடும் வெளியீட்டுரையும்:
**திரு.நா.வன்னியசிங்கம்**
(அதிபர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)
அறிமுகவுரை: **திரு.ந.பேரின்பநாதன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)
முதற்பிரதி பெறுபவர்:
**லயன் E.S.P. நாகரத்தினம் M.J.F.**
(உரிமையாளர், இ.ச. பேரம்பலம் ச.க. நிறுவனம்)
சிறப்புப் பிரதி பெறுபவர்கள்: **திரு.ஆ.சிவராஜா**
(உரிமையாளர், சுஜா போட்டோ & வீடியோ)
**திரு.வ.பராராஜசிங்கம்**
(உரிமையாளர், லஜன்ஸ் பான்ஸி கவுஸ்)
**திரு.இ.ரஜனிகாந்**
(சமுர்த்தி வங்கிச் சங்கம், பிரதேச செயலகம் நல்லூர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**வணிக மாணவர் மன்றம்**
**யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

(31054)(30-19-18-34)

**விழா சிறப்புற வாழ்த்துவோர்:**

சீமாட்டி புடைவைக் கடை 15, மின்சார நிலைய வீதி,
கணேசன் ஸ்ரோர்ஸ் 201, கே.கே.எஸ். வீதி,
சிவகணேசன் ஸ்ரோர்ஸ் 41, பெரியகடை.
யாழ்ப்பாணம்

வலிகாமம் பகுதியில் உள்ள

# உணவுச்சாலைகளில் நிலவும் சீர்கேடுகளை சீர்செய்யுமாறு உரிமையாளர்களுக்குப் பணிப்பு

வலிகாமம் தெற்கு,ஏப்.20

வலிகாமம் பகுதியில் இயங்கிவரும் உணவுச்சாலைகள், சிற்றுண்டி நிலையங்கள், தேநீர்ச்சாலைகள் போன்றவற்றில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து மேற்படி நிலையங்களில் சுகாதாரச் சீர்கேடுகளை சீர்செய்யுமாறு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் பகுதியில் சுன்னாகம், மருதனார்மடம், உடுவில், இணுவில போன்ற இடங்களில் உள்ள உணவுச்சாலைகளில் இவ்வாறான சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவகங்களில் உணவுப் பொருள்கள் பலவும் கைகளினால் எடுத்து வைக்கப்படுவதாகவும், வாடிக்கையாளர்களின் கைகளால் தொட்ட உணவுப் பண்டங்கள் மீண்டும் பாதுகாக்கப்பட்டு, பின்னர் அவை ஏனையவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவகங்களில் காணப்படும் குடிநீர்த் தொட்டிகளில் மக்கள் கைவைத்து நீரை அள்ளிக் குடிப்பதாகவும், இதன் காரணமாக நீர் அசுத்தமடைந்து வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உணவகங்களில் காணப்படும் சமையல் நிலையங்களில் சுகாதாரம் பேணப்படுவதில்லை எனவும், இலையான்களும், எறும்புகளும் உணவுப் பொருள்களில் அமர்ந்து அவற்றை அசுத்தமடையச் செய்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இக்குற்றச்சாட்டுக்களை செவிமடுத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இது தொடர்பாக உணவகங்கள், தேநீர்ச் சாலைகள் போன்றவற்றின் சுகாதாரச் சீர்கேடுகளைச் சீர்படுத்துமாறும், இம்மாத முடிவுக்குள் அவை சீர்ப்படுத்தப்படாவிடின் குறிப்பிட்ட நிலைய உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி நேரிடும் எனவும் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில்,

★ நிலையங்கள் யாவும் துப்புரவாக இருக்கவேண்டும்.

★ வேலை செய்யும் வேலையாள்கள் மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

★ உணவுப் பொருள்களை கைகளால் எடுத்துப் பாவிக்காமல் கரண்டிகளைக் கொண்டு பாவிக்க வேண்டும்.

★ வாடிக்கையாளர் கேட்கும் அளவில் உணவுப் பொருள்களை எடுத்து வைக்கவேண்டும்.

★ சுகாதாரத்தைப் பேணும் வகையில் குடிநீர் வைக்கப்பட்டுள்ள தொட்டிகளுக்கு குழாய்கள் பொருத்தப்படவேண்டும்.

★ எறும்புகள், ஈக்கள் உணவுப் பொருள்களிலோ, சமையல் இடங்களிலோ அமர்ந்திருக்காமல், அவற்றை மூடி அல்லது கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைத்திருக்க வேண்டும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (8-152)

## ஆலயத்துக்குச் சென்ற சிறுமியின் தங்க நகைகள் அபகரிப்பு

சாவகச்சேரி,ஏப்.20

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் கடைசி நாள் உற்சவத்திற்கு தாயுடன் சென்ற 5 வயதுச் சிறுமி தங்கச் சங்கிலியையும், காப்பையும் திருடனிடம் பறிகொடுத்தாள்.

பக்தர்கள் கூட்டமாகக் காணப்பட்ட பங்குனித்திங்கள் உற்சவ இறுதி நாளன்று தாயுடன் ஆலயம் சென்ற சிறுமி தாய்க்குப் பின்னால் சென்றபோது பின்னால் நின்ற திருடன் யானை காட்டுவதாகச் சிறுமியைக் கூட்டிச் சென்று சிறுமி அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் காப்பையும் அபகரித்துள்ளான்.

பிள்ளையைக் காணாத தாய் பதறியடித்துக்கொண்டு சன நெரிசலில் தேடியபொழுது சிறுமி ஓரிடத்தில் அழுதுகொண்டு நின்றாள். அப்பொழுதே தாய் பிள்ளையின் கழுத்திலும், கையிலும் நகைகள் இல்லாததைக் கண்டு கொண்டார்.

இதுதொடர்பாக ஆலயச் சூழலில் பணியில் இருந்த பொலீஸாரிடம் முறையிடப்பட்டது. பொலீஸார் இதுதொடர்பாக எவரையும் கைதுசெய்யவில்லை. (8-31)

## ஐ.தே. முன்னணி உறுப்பினர் சபாநாயகர் ஆவதில் நம்பிக்கை

கொழும்பு,ஏப்.20

புதிய சபாநாயகர் தெரிவுக்கான ஆயத்தங்கள் ஜரூராக நடைபெற்றுவரும் அதேசமயம், ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் முன்னாள் அமைச்சரும் சிரேஷ்ட அரசியல்வாதியுமான டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தாம் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படுவார் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிவிததுள்ளார்.

வியாழக்கிழமை ஆரம்பமாகவிருக்கும் 13ஆவது நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள், நடைமுறைகள் பற்றிப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு விளக்கங்களும் அறிவுறுத்தல்களும் கொடுக்கப்பட்டுவரும் அதேவேளை, புதிய சபாநாயகர், தெரிவுக்கான அடிப்படை ஏற்பாடுகளும் நடைபெற்றுவருகின்றன.

சபாநாயகர் ஒருவர் ஒருமனதாகத் தெரிவுசெய்யப்படுவது அசாத்தியம் என்பதால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய முன்னணியும் சிறிய கட்சிகளின் ஆதரவைத் தம்பக்கம் ஈர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமையைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் லொக்குபண்டாரவின் பெயர் முன்மொழியப்படலாம் என்று கருதப்படும் அதேவேளை, சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேசியப் பட்டியல் உறுப்பினர் டியூ.குணசேகர நிறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சபாநாயகர் பதவிக்கு தாம் தெரிவு செய்யப்படுவது நிச்சயம் என்று கருதும் லொக்குபண்டார, சபாநாயகர் தெரிவு இரகசியமாகவே நடைபெறும் என்பதால் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் தமக்கு வாக்களிப்பார்கள் என்றும் நம்புகிறார்.

சபாநாயகர் தெரிவுக்கு முன்னதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நாடாளுமன்றத்தின் அமர்வை பிரகடனப்படுத்தும் ஜனாதிபதியின் அறிக்கை ஒன்றினை வாசிப்பார்.

சபாநாயகர் தெரிவின் பின்னர் சகல உறுப்பினர்களும் உத்தியோகபூர்வமாக பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்கள். இதையடுத்து பிரதி சபாநாயகரும், பிரதிக் குழுக்களின் தலைவரும் தெரிவுசெய்யப்படுவார்கள். (ப)

### உயர்தர பரீட்சையில் கடமை புரிவோருக்கான அறிவுறுத்தல் கூட்டம்

வலிகாமம் தெற்கு,ஏப்.20

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள் மற்றும் நிரந்தர நோக்குநர்களாகக் கடமைபுரியவுள்ள வலிகாமம் கல்வி வலய உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இம்மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுளளது.

இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை வலிகாமம் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (8-152)

### வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,ஏப்.20

காங்கேசன்துறை வீதியில் இருந்து கோண்டாவில் கிழக்கு சந்திவரை செல்லும் வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

கோண்டாவில் உப்புமடப்பிள்ளையார் கோயில் சந்தியில் இருந்து பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு சந்தி வரை செல்லும் இவ்வீதியில் மேடுபள்ளங்களும் குழிகளும் நிறைந்து காணப்படுகின்றன.

வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பனவற்றில் இப்பாதையூடாகச் செல்லும் பயணிகள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

போக்குவரத்துப் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படும் இவ்வீதியை உடனடியாகப் புனரமைப்புச செய்து தரும்படி இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-152)

## வடக்கு-கிழக்கு கிராமிய வங்கி அமைப்பு முறையில் மாற்றம்

கொழும்பு,ஏப்.20

வடக்கு - கிழக்கில் கிராமிய வங்கி அமைப்பு புதிய முறையில் மாற்றியமைக்கப்படவுள்ளது. வடக்கு - கிழக்கு புனரமைப்பு அபிவிருத்திக்கான சமூக நிலைய மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டத்தினைத் தயாரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இத்திடடத்திற்கென ஒரு கோடி 4 லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கில் 99 கிராமிய வங்கி அமைப்பு முறைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த வங்கியின் ஆற்றல்கள் பலப்படுத்தப்பட்டு ஏனைய வர்த்தக வங்கிகளுக்குச் சமமாக இவற்றுக்கும் கடன் வசதிகள் வழங்கப்படவிருக்கின்றன.

இது தொடர்பாக நேற்றுத் திங்கட்கிழமை திருகோணமலையில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ஐ-8-ரி)

## வைக்கோலுடன் வீதியில் நின்ற மாட்டுவண்டில் தீக்கிரை!

சாவகச்சேரி,ஏப்.20

வைக்கோல் ஏற்றப்பட்ட நிலையில வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த மாட்டு வண்டில் வைக்கோலுடன் சேர்தது விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கடந்த 15ஆம் திகதி புதன் இரவு 9 மணிக்கு கைதடி நாவற்குழி தெற்குப் பகுதியில் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கைதடி நாவற்குழி தெற்குப் பகுதியைச் சேர்ந்த க.பிள்ளைநாயகம் என்பவருடைய மாட்டு வண்டியே தீக்கிரையானது.

வியாபாரத்திற்காக வண்டிலில் வைக்கோலை ஏற்றி அவரது வீட்டுக்கு முன்னால் வீதியின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோதே வண்டில் தீக்கிரையாக்கப்பட்டது. இதனால் வைக்கோல் முழுமையாக எரிந்ததுடன் வண்டிலும் எரிந்து சேதமானது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8-31)

பொதுத்தேர்தல் தினத்துக்கு மறுநாள் வரணியில்

## குடும்பஸ்தரைத் தாக்கிய வழக்கில் 6 சந்தேக நபர்களுக்கும் பிணை

தென்மராட்சி,ஏப்.20

கடந்த பொதுத்தேர்தல் வாக்களிப்பு நடந்த மறுநாள் வரணிப்பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு நபர்களுக்கும் கடந்த வெள்ளியன்று சாவகச்சேரி நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போது சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் தலா 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும், ஏனைய மூன்று சந்தேக நபர்களையும் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

அரசியல் கட்சியொன்றிற்குப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட வரணி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவஞானம் என்பவர் தாக்கப்பட்டதற்காக இந்த ஆறு சந்தேக நபர்கள் மீதும் கொடிகாமம் பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். (ஐ-117)

## வாசகர் திருமுகம்

### தேவ மந்திரங்களை ஒலிபரப்புவது சரியா?

நம் கோயில்களில் ஓதப்படும் தேவமந்திரங்கள் நம் சமயக் கோட்பாடுகளின்படி ஆசாரத்துடன் வாழும் தேவ அந்தணப் பெரியார்கள் தேவ பாஷையில் இறைவனை இறைஞ்சி அருள் பெற்று அடியார்களுக்கு அருளப் பயன்படும் ஊடகமாகும்.

ஆனால், தெய்வத்துக்கு ஓத வேண்டிய தேவ மந்திரங்களை ஒலிவாங்கிக்கு ஓதி, ஒலிபெருக்கி, ஊன் உண்ணுவதற்காக உயிர்களைக் கொன்றுகொண்டிருப்பவர்களையும், ஊனையும் மதுவையும் ருசித்து உண்டுகொண்டிருப்பவர்களையும் பஞ்சமா பாதகர்களையும், ஆசாரமில்லாதவர்களையும் ஆசௌசம் உடையவர்களையும் சென்றடையச் செய்வது அபச்சாரம் ஆகாதா? தெய்வீக மந்திரங்களின் தெய்வீகத்தை இழக்கவைக்கும் செயலல்லவா? இப்படி அபச்சாரம் செய்வது நன்மையின் எதிர்மாறான தீமையை ஈர்க்காதா?

மேலும், தற்கால கடுகதி வாழ்க்கை முறைக்கேற்ப ஆலயங்களிலும் மூச்சு வாங்க கடுகதியில் மந்திரங்களை ஓதி ஒலிபெருக்க, அது ஏதோ அரசியல்வாதி தன் எதிராளியைத் திட்டித்தீர்ப்பது போன்ற ஒலியை அலலவா எழுப்புகின்றது? இது வியாபாரகம். புனிதமாகப் போற்றவேண்டிய தாய்மையும் பெண்மையுமே வியாபாரக் காட்சிப் பொருள்களாகிய காலம்.

நம்முடைய புராதன மதத்தின் தேவ மந்திரங்களும் ஐஸ்கிரீம் வான் வியாபாரமாகியது கலிகாலத்தின் கோலமா?

- பரமன்

### 'நாலு சந்தி' என்பதே சரி!

தங்களது 12.03.2004ஆம் திகதி பத்திரிகையில் "ஊர்களின் பெயர்களை சரியாக எழுதுங்கள்" என்ற தலைப்பில் வெளியான கடிதம் தொடர்பாக -

அந்தச சந்தியின் பெயர் 'மாலு' சாந்தியும் இல்லை 'மாலி' சந்தியும் இல்லை.

உண்மையில் இச்சந்தியிலிருந்து நான்கு தெருக்கள் பிரிகின்றன. எனவே, இச்சந்தியின் பெயர் 'நாலு சந்தி' என்றே ஏற்றுக்கொள்வது மிகப் பிரச்சினை தராத கருத்தாகும் என நான் எண்ணுகிறேன்.

சு.அழகேசன்.

### மதுவரி அலுவலர்கள் தேர்தல் கடமையில் புறக்கணிப்பு

மருத்துவசேவை, தீயணைப்புச்சேவை போன்ற அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அரச அலுவலர்கள் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற தேர்தல் கடமைக்கு அழைக்கப்படும்போது கட்டாயம் சமுகமளித்து குறிப்பிட்ட கடமையை ஏற்று நீதியான தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு உதவ வேண்டியது ஒவ்வோர் அரச உத்தியோகத்தரினதும் பிரதான கடமையாகும் என்று வலியுறுத்தப்படுகின்றது. தவறின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என்றும் கூறப்படுகின்றது.

இந்தவகையில், யாழ்ப்பாண மதுவரித் திணைக்களத்தில் கடமையாற்றும் மதுவரிப் பரிசோதகர்கள், மதுவரி அலுவலர்கள் ஆகிய அரச உத்தியோகத்தர்களும் கடந்த காலங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல் போன்றவற்றில் வாக்கெடுப்பு நிலையங்களின் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், வாக்கெடுப்பு நிலைய எழுதுவர் போன்ற பதவிகளில் அமர்த்தப்பட்டு தமது கடமையைச் செவ்வனே நிறைவேற்றியிருந்தனர்,

ஆனால், கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மதுவரித்திணைக்களத்தைச் சேர்ந்த மதுவரிப்பரிசோதகர்கள், மதுவரி அலுவலர்கள் ஆகிய தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் எவரும் தேர்தலில் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை. இது குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், வழக்கமாக அரச அலுவலர்களை தேர்தல் கடமையில் ஈடுபடுத்துவதற்காகக் கோரும் விண்ணப்பங்கள்கூட யாழ். மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் எவருக்கும் வழங்கப்படாது மேலிடத்தால் இரகசியமான முறையில் முடக்கப்பட்டுவிட்டது.

முன்னைய தேர்தல்களில் தமது கடமையைச் சிறப்பாக நிறைவேற்றிய குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் இந்தத் தேர்தலில் மட்டும் தாங்கள் எல்லோரும் தேர்தல் கடமையில் இருந்து ஒதுக்கப்பட்டதற்கான காரணத்தை அறிவதற்கு மிகவும் ஆவலாக உள்ளனர்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் என்ற முறையில் யாழ். மாவட்ட அரச அதிபர் தேர்தல் கடமையில் யாழ். மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டதற்கான, உண்மையான காரணத்தை விளக்குவதன் மூலம் உத்தியோகத்தர்கள் மத்தியில் நிலவும் சந்தேகங்களையும் பொய் வதந்திகளையும் நீக்குவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான நம்பர்-1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 21.04.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு:றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No.: 3529, 2867, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31047)

யாழ்ப்பாணம், சுதுமலை வடக்கில 8பரப்புக்காணி வீட்டுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: V.K. சேனாதிராஜா, யாழ் - 222 6574, கொழும்பு - 0112447010. (C/34545)

யாழ்ப்பாணம் 12/3, கந்தபுராண வீதி, கந்தர்மடத்தில் 2பரப்புக்காணியும், 2பரப்புடன் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: யாழ் - 222 6574, கொழும்பு - 0112447010 (C/34546)

நந்தாவில் அம்மன் கோயில் முன்பாக 3500 சதுர அடி கொண்ட வீடு 4½ பரப்புக் காணி தனிமையான கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.செந்தில், நந்தாவில் அம்மன் கோயிலடி முன்பாக, கொக்குவில். (31061)

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட நல்ல நிலையிலுள்ள Room Air Condition Friedrich (Made in USA) வரவேற்பறைக்குகந்த அழகிய வண்ண (Carpet) நில விரிப்பு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.ஆனந்தன், வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில். T.P. 077 6034090 (31062)

Doctor இன் பாவனையிலுள்ள GN 125 (SUZUKI - Japan) NP HK... மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: பரதன், Multi Service, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 021 222 5220 (30990)

## தவறிவிட்டது

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த கந்தையா பத்மப்பிரியா என்பவரது தே.அ.அ. (828310658V), பல்கலைக்கழக அ.அ. (2002/A/108) என்பன அடங்கிய 'பேர்ஸ்' 08.04.2004 இல் யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (31055)

ஆ.அந்தோனிப்பிள்ளை என்பவரின் தே.அ.அ. (இல.490624260V), சாரதி அனுமதி அட்டை (கணனி) இல.DL309892) என்பன வட்டுக்கோட்டை பொலீஸ் ஸ்ரேஷனுக்கும் தபாற்கந்தோருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விரைவில் தந்துதவவும். தொடர்பு: ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை, சாமியன் அரசரி, மிடக்காடு ஒழுங்கை, கரவெட்டி (சன்மானம் வழங்கப்படும்). (31051)

தி.ரோகினிதேவி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 515080449V), பாதுகாப்புப் படையினர் வழங்கிய விசேட அடையாள அட்டை என்பன காரைநகரிலிருந்து மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு 13-04-2004 செவ்வாய்க் கிழமையன்று பஸ்ஸில் பயணஞ் செய்தபோது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.134 (276), பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.(சி-34552)

### சமாதான நீதிவான்களின் கவனத்திற்கு !

குருநகர்,ஏப்.20

யாழ்.மாவட்டத்தில் சமாதான நீதிவான்களாகப் பதவிவகிப்போர் யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தில் தம்மை உறுப்பினர்களாகப் பதிவுசெய்துகொள்ளமுடியும் என சங்கத்தலைவர் லயன் க.நாகராசா தெரிவித்துள்ளார். (ஐ-51)

# செய்தியாளர்கள் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள கீழே குறிப்பிடப்படும் இடங்களில் உதயன் நாளிதழின் பிரதேசச் செய்தியாளர்களாகப் பணியாற்றுவதற்கு ஆர்வமும், தகுதியும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழில் நிறைந்த தேர்ச்சியும் செய்தித்துறை மற்றும் பத்திரிகைத்துறைகளில் நாட்டமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

25 முதல் 30 வயதுடையோர் விரும்பப்படுவர்.

விண்ணப்ப இறுதி நாள்: 30.04.2004

- கிளிநொச்சி நகரம்
- பரந்தன்
- வட்டக்கச்சி
- இராமநாதபுரம்
- கண்டாவளை
- பூநகரி
- முழங்காவில்
- வேரவில்
- திருவையாறு
- ஸ்கந்தபுரம்
- முல்லைத்தீவு நகரம்
- முள்ளியவளை
- ஒட்டுசுட்டான்
- முத்தையன்கட்டு
- தண்ணீரூற்று
- புதுக்குடியிருப்பு
- மாத்தளன்
- உடையார்கட்டு
- கற்சிலைமடு
- மல்லாவி

பிரதம ஆசிரியர்
உதயன் பப்ளிகேஷன்ஸ்
361, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை இராசசுந்தரம்

(ஓய்வுபெற்ற இரத்தப் பரிசோதகர், யா/அரசினர் வைத்தியசாலை)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசசுந்தரம் அவர்கள் 18.04.2004இல் காலமாகிவிட்டார்.

அன்னார் சவுந்தரத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - சாவகச்சேரி, அமிர்தாம்பிகை வித்தியாசாலை) அன்புக் கணவரும் ரவி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களாகிய கீதா, யசோதரன், சிவகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுயாதாவின் அன்பு மாமனாரும் வினுஜனின் அன்புப் பேரனும் லோகேந்திரன், கனகசுந்தரம், இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2004) செவ்வாய்க் கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(31056)
தொ.பே. 2471764. (26-21-14)

தகவல்:
இ.ரவி (மகன் - சுவிஸ்)

# சமய சந்நிதிகளில்

கரவெட்டி,ஏப்.20

வல்வெட்டித்துறை ஸ்ரீ முததுமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இரதோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9.30 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 7மணிக்கு வல்வை, ஊறணி தீர்த்தக்கரையிலும் இடம்பெறும். (ஐ-10-70)

★ ★ ★ ★

நவாலி,ஏப்.20

ஆனைக்கோட்டை ஸ்ரீ வல்லியப்ப சுவாமி கோயில் தேவப்பிரதிஷ்டை தின நன்நாள் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10.32 மணிக்கு ஆரமபமாகி நடைபெறவுள்ளது.(ஐ-10-100)

★ ★ ★ ★

வலி.தெற்கு,ஏப்.20

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இரதோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாளும் இடம் பெறும். (ஐ-10-152)

★ ★ ★ ★

வலி.தெற்கு,ஏப்.20

தொண்டமனாறு ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் எதிர்வரும் 26 ஆமதிகதி முற்பகல் 11.30 மணிக்கு பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தையொட்டிய பூர்வாங்கக் கிரியைகள் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம பெறும். (ஐ-10-152)

### ஓட்டோ மீது தாக்குதல்!

துன்னாலைப் பகுதியில் வீட்டு வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோவொன்று இனம்தெரியாதவர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் கத்திகள், வாள்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலீஸார் நால்வரைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர். (ஐ-10-70)

### ஈச்சம்பழச்சீசன் ஆரம்பம்

குடத்தனை,ஏப்.20

தற்பொழுது ஈச்சம்பழச் 'சீசன்' ஆரம்பித்துள்ளதை அடுத்து குடத்தனைப் பகுதியில் உள்ள தோட்டக் காணிகளிலும் ஏனைய பிரதேசங்களிலும் ஈச்சம்பழங்கள் குலைகுலையாய்க் காய்த்துள்ளதைக் காணமுடிகிறது.

இப்பொழுது பாடசாலை விடுமுறைக் காலமாகையால் சிறுவர்கள தொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது ஈச்சம்பழங்களைப் பறித்து வருகின்றனர். (ஐ-10-ரி)

### கல்யாண மண்டபம்

குடத்தனை தபாற்கந்தோர் வீதிக்கு அருகில் உள்ள காணியில் கல்யாண மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கல்யாண மண்டபம் அமைப்பதற்கான நிதி உதவியினை 'நிக்கொட்' நிறுவனம் வழங்கியுள்ளது. (ஐ-10-ரி)

### விபத்தில் காயம்!

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் வந்த சைக்கிளை மோதிவிட்டு ஓடித்தப்பியதாகக் கூறபபடும் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை நுணாவில் சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கோவிலாக்கண்டியைச் சேர்ந்த சி. இரத்தினசிங்கம் (வயது52) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-10-117)

# தேவை

## CIVIL TECHNICAL OFFICER

வளர்ந்து வரும் எமது ஸ்தாபனத்தின் கட்டட நிர்மாண வேலைகளைப் பொறுப்புடன் திட்டமிட்டு நிறைவேற்றக் கூடிய கட்டட நிர்மாண அலுவலர் ஒருவர் தேவை.

*தகைமைகள்:*

- இப்பணிக்குத் தேவையான தொழிற்கல்வி
- நிர்மாண வேலைகளில் குறைந்தது 10 வருட முதிர்ந்த அனுபவம்.
- கட்டட நிர்மாணம் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் தனித்து நிர்வகிக்கும் ஆற்றல்.
- கட்டட பராமரிப்புப் பணிகளில் தேர்ந்த அனுபவம்.

*சம்பளம் பேசித் தீர்க்கலாம்.*
*வயதுக் கட்டுப்பாடு இல்லை.*

விண்ணப்பம் இன்றிலிருந்து 7 நாள்களுக்குள் அனுப்பப்படல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி: (34-21-14)

மனிதவள முகாமையாளர்,
லக்ஷ்மி குறூப்,
46/1, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

(சி-345547)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்





| அமரர் | திருமதி |
| --- | --- |
| நாகநாதர் நாகலிங்கம் | நாகலிங்கம் அரவிந்தமலர் |
| திதி : பிரதமை | திதி : ஷஷ்டி |

02.11.1940 ⟵ மலர்வு ⟶ 14.02.1951

02.05.2003 ⟵ உதிர்வு ⟶ 07.05.2003

அன்போடும் பண்போடும் ஆதரவாய் வாழ்ந்திருந்தீர் எமையெல்லாம்
வளர்த்து ஆளாக்கிவிட்டுத் திடீரென்று மறைந்துவிட்டீர்களே!
நெஞ்சோடு உம் நினைவு நித்தமும் உறவாட வைத்துச் சென்றீரோ?
உங்களது ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் வேண்டுகின்றோம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி. - குடும்பத்தினர்.

(22-21-14-18) (31059)

# இலங்கையின் அபிவிருத்திக்கு தென்கொரியா உதவும்

கொழும்பு,ஏப்.20

இலங்கையின் அபிவிருத்திக்குத் தொடர்ந்தும் உதவிகள் வழங்கப்படுமென்று தென்கொரியா உறுதி அளித்துள்ளது.

இதன்படி, இலங்கையர்களுக்கு தென்கொரியாவில் தொழில்வாய்ப்புக்களை வழங்க அந்த நாடு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

வெளிநாட்டவர்கள் தொழில் புரிவதற்கென்று தென்கொரிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சேவை அனுமதிப பத்திரத்திட்டத்தில் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை உட்பட எட்டு நாடுகளுக்கு தென்கொரியா இந்த அனுமதியை வழங்கியுள்ளது. இலங்கைக்கான தென்கொரியத் தூதுவர் லங்சியு ஹொங் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவி ரத்னவைச சந்தித்தபோது இத்தகவலை தெரிவித்தார். (ஒ-9-12)

## முத்திரையிடும் பணி

வடமராட்சி,ஏப்.20

பருத்தித்துறைப் பிரதேச சபைக் குட்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சந்தைகளில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் மற்றும் அளத்தல் உபகரணங்கள் பரிசோதனை செய்யபட்டு முத்திரையிடும் பணி இன்று செவ்வாய்க்கிழமை மந்திகையில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் காலை 9மணி முதல் பிற்பகல 1.30 மணி வரை நடைபெறும். (ஒ-173)


## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத் துறை இறுதியாண்டு (2003) மாணவர்களின் சுயவிவரங்கள் அடங்கிய

'முகவரிகள்' கையேடு

நாளை (21-04-2004) புதன்கிழமை இராமநாதன் நுண்கலை வளாகத்தில் மு.ப.11.00 மணிக்கு (மருதனார்மடம்) கையளிக்கப்படவுள்ளது. அனைத்து இறுதிவருட (2003) மாணவர்களையும் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன.

(17-13-37)(31066) பிரதிநிதி.


## துயர் பகிர்வு

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. ஆசிரியை

திருமதி அமிர்தாம்பிகை செல்வகுணச்சந்திரன்

அவர்களின் அன்புத் தந்தையார்

**கைலாசபிள்ளை நடராசா**

அவர்கள் மட்டுவில் வடக்கில் 17.04.2004 ஆம் திகதியன்று காலமாகிய செய்தி கேட்டு கவலையடைகின்றோம். மறைவினால் ஆறாத்துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரிலே நாமும் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.,
சாவகச்சேரி.

(31075)(37-12-13)


கொம்பியூட்டர் பொலிமர் இறபர் முத்திரை

இலவசம்

ஆச்சரியமா?

ஏப்ரல் 5 முதல் மே 5 வரை

மேலதிக விவரங்களுக்கு

யசோ,
35, கன்வாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.



## உடன் தேவை

கலட்டியில் உள்ள எமது நிறுவனத்திற்கு போட்டோபிரதி எடுப்பதற்கும், தொலைபேசி இயக்குவதற்கும் ஆள்கள் உடன்தேவை. எதிர்வரும் 23.04.2004 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். (கல்வித்தகைமையுடையோர் விரும்பத்தக்கது)

விளம்பர இல:2233

C/o. உதயன், யாழ்ப்பாணம் (12-13-37)(34556)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 13 |
| 12 | 05 |
| 1946 | 2002 |

அமரர்

**கணபதிப்பிள்ளை கிருஷ்ணானந்தன்**

இரண்டு ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும்
இதயத்தில் உம் நினைவு நிறைந்தேயிருக்கும்
திரண்டு வரும் கண்ணீரால் அஞ்சலி செலுத்தியே
தினமும் நினைந்தே பூவுலகில் வாழ்கின்றோம்.

"ஜெயபதி"
சேமப்புல வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

சரளா, சுதர்சன்,
சகிலா (சுவிஸ் குடும்பம்),
சிவதாஸ் (லண்டன்),
சுதாகரன் (லண்டன்) ஜெயாகரன்.

(31078)37-12-13

## ஐந்தாம் ஆண்டு நினைவுகளுடன்..

அமரர்

**செல்லப்பா சண்முகரத்தினம்**



தோற்றம் 02.07.1956 — மறைவு 08.04.1999

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
என்றும் உங்கள் நினைவுகளுடன்.

புது றோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (31082)(37-12-13)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மச்சான்மார்.


நிறஞ்சனாஸ் சாங்கானை

நாகர்ஜுன், பிரபுதேவா நடித்த

அக்னி வர்ஷா

(ஹிந்திப்படம்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புநே)

வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இற்கு

MBRCRY RISING

(சீ34402)

நாகம்ஸ் சுன்னாகம்

பிரசன்னா, அனு, வடிவேல்

புதிய வெளியீடான நடித்த

காதல் டாட் காம்

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(C 34180)(12)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்

ஒரேதின வெளியீடு

விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



கில்லி

10.30.,2.30, 6.30, 9.30 (பு.நே.)

(ரீலீஸ்)

(C/34517)(22)

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.


## கண்ணீர் அஞ்சலி

கதிரிப்பாய் பகுதி கிராமசேவையாளர்

திரு.க. துரைராசா அவர்களின்அன்பு மகன்

**து.சாருஜன்**

(யா/இந்து மாணவன்)

அவர்களின் அகால மரணத்தையிட்டு மிகவும் துயரடைகி... அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆ... அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

(31084)(36-12-17) -கதிரிப்பாய் வாழ் மக்கள்.

## முதலாம் வருட இதய அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 | 20 |
| 01 | 04 |
| 1995 | 2003 |

**செல்வி புஸ்பராஜா சபீனா**

(சபிக்குட்டி)

ஆண்டு ஒன்றும் ஆயிற்றோ சபிக்குட்டியே!
அந்தோ நாம் உன்னைப்பிரிந்து?
ஈண்டு உன்னை நினைத்தபடியேதான்
இப்பூவுலகில் நாம் வாழ்கின்றோம்!
கலகலப்பான பேச்செங்கே? கணீரென்ற குரல் எங்கே?
சிரித்தபடியே வரும் எங்கள் சபீனாவே!
வெலவெலத்துப் போனோம் நின்பிரிவால் வாடி நிதம்
ஆத்ம சாந்தி வேண்டி கடவுளைப் பணிகின்றோம்!

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

அன்புடன் அம்மா, அப்பா,
அண்ணா, அக்காமார், தம்பி,
உற்றார், உறவினர்கள்.

(31073)(3712-17)

புகழ் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்

## மரண அறிவித்தல்கள்

### துரைராசா சாருஜன்

(மாணவன்,யா/இந்துக் கல்லூரி, உயர்தரம்)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா சாருஜன் நேற்று (19.04.2004) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார், கந்தையா துரைராசா (கிராம அலுவலர்), ...சென்ற துரைராசா அம்பிகாவின் மகனும் துரைராசா ஜெயமணியின் பேராமகனும் தனுஜன், கார்த்திகாஜனி, இளங்குமரனின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தோப்பு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
தோப்பு, அச்சுவேலி. (31019)(37-12-17)

தகவல்:
க.துரைராசா (கி.அ) (தந்தை).

### திருமதி செல்வராசா கிருபைவரம்

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா கிருபைவரம் 18.04.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி இரத்தினதுரை (பக்கஸ்) யின் அன்பு மகளும் செல்வராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் கிருபாகரன், பிரீதினி, செல்வாகரன், காலஞ்சென்ற சிறிகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும புஸ்பகுமாரி, கிறிஸ்துதாசன், மேரிகிறிஸ்ரோபல் ஆகியோரின் அன்பு மாமியாரும் அருள்ராஜ், தனுராஜ், கிறிஸ்ரிகா, கிருபராஜ், கருஷா, நிருஷா, துசான், டிசான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.04.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசன் தென் இந்தியத்திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன்,
மிருசுவில். (31081)(12-17-37)

தகவல்:
கா.செல்வராசா
குடும்பத்தினர்.

### தம்பிஜயா கந்தசாமி

புங்குடுதீவு 06 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 02ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா கந்தசாமி கொழும்பில் நேற்று (19.04.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தம்பிஐயா - தெய்வானையின் அன்பு மகனும் காலஞ்சென்ற குழந்தைவேலு கனகம்மாவின் அன்பு மருமகனும் சுதர்சினி (சுவிஸ்) காலஞ்சென்ற கஜேந்தினியின் தந்தையும் செல்வநாதனின் (சுவிஸ்) மாமனாரும், சாரங்கனின் பேரனும், செல்லத்துரை (இந்தியா), பாலசுந்தரம் (இந்தியா), காலஞ்சென்ற நல்லதம்பி, பொன்ராஜ் (வவுனியா), இரத்தினராஜா (கொழும்பு), சரஸ்வதி, இரத்தினகோபால் (நோர்வே), யோகாம்பிகை, கமலாநிதி ஆகியோரின் சகோதரரும் கோமளம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, கிறிஸ்ரபெல், வசந்தா, திருமலர் (நோர்வே), குணலிங்கம்(ஆனைப்பந்தி பிரபல வர்த்தகர்), சிவநேசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சோதிலிங்கம் (வெற்றிலைக்கடை) மற்றும் கனகலிங்கம் (வவுனியா), சரோஜினிதேவி(கொழும்பு), அன்புமலர் (கொழும்பு), அன்னலெட்சுமி (இந்தியா), கனகரெத்தினம் (சுவிஸ்), ஜெயமதி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஜெயலெட்சுமி, சந்திரன், சகானந்தன், இதயச்சந்திரன், பாக்கியலெட்சுமி, விஜயரெட்ணம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

புதுச்செட்டித்தெரு,
கொழும்பு. (31077)(37-17-12)

தகவல்:
சகோதரிகள்.

# மட்டக்களப்பில் வழமைநிலை!

சுமார் மூன்று வாரகாலத்துக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வழமையான நடவடிக்கைகள் பூரணமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2 ஆம் திகதி பொதுத் தேர்தல், 9 ஆம் திகதி கருணா அணியினருடனான மோதல், தமிழ் சிங்கள புத்தாண்டு என மாவட்டத்தின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்ந்து சீர்குலைந்திருந்தன.

நேற்று மட்டக்களப்பு உட்பட சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அனைத்து அலுவலகங்களும் வழமை போன்று இயங்கின. நகரங்களில் வர்த்தக நிலையங்கள் யாவும் திறந்திருந்தன. நகரங்களிலிருந்து சகல போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெற்றன.

## அம்பாறைக்கு மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து நேரடியாகத் தெரிவான நான்கு எம்பிகளில் இருவரை இராஜினாமாச் செய்ய வைத்து விட்டு அந்த இடங்களில் ஒன்றை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கலாம் என்று அம்பாறை மாவட்ட பொதுஜன அமைப்புக்கள் பத்மநாதனிடம் தெரிவித்துள்ளன.

இப்போது தெரிவு செய்யப்பட்ட எம்.பி.க்கள் யாழ்.மாவட்டத்துக்கு 8 பேரும், வன்னி மாவட்டத்துக்கு 5 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 4 பேரும், திருகோணமலை மாவட்டத்துக்கு 2 பேரும், திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்துக்கு ஒருவர் மட்டும் இருக்கின்றார். ஆகவே கிடைத்த தேசியப்பட்டியல் எம்பிப்பதவிகள் இரண்டில் ஒன்றை ஏற்கனவே வாக்களித்தபடி அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கியிருக்க வேண்டும். அது நடைபெறவில்லை. 8 தெரிவுசெய்யப்பட்ட எம்பிகள் உள்ள யாழ்ப்பாணத்துக்கும், 4 தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் உள்ள மட்டக்களப்புக்குமே வழங்கபட்டுள்ளன.

நடந்தவை நடந்துவிட்டது. இப்போது செய்யக்கூடியது என்ன? மட்டக்களப்பில் தெரிவு செய்யப்பட்ட நான்கு எம்பிக்களில் இருவரை இராஜினாமாச் செய்ய வைத்து விட்டு அப்பதவிகளில் ஒன்றை அம்பாறைக்கு வழங்கலாம் என்று அம்பாறை மாவட்ட பொதுஜன அமைப்புக்கள் பத்மநாதன் எம்.பிக்கு யோசனை கூறியுள்ளன. இந்த யோசனையை கிளிநொச்சியில் புலிகளுடனான சந்திப்பின் போது வலியுறுத்தி சாதகமான முடிவைப் பெற்று வரவேண்டும் என்று அவை பத்மநாதன் எம்.பியைப் பணித்துள்ளன.

கிளிநொச்சிக்குச் செல்வதற்காகப் பத்மநாதன் நேற்று காரைதீவிலிருந்து கிளம்பினார். அதற்கு முன்னர் அவர் அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேகத்தில் கலந்து கொண்டார்.

சித்திரைப் புத்தாண்டையொட்டி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்ற இருவேறு பாரம்பரிய விளையாட்டு விழாக்களிலும் அவர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தட்டிவான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தட்டிவான் தடம் புரண்டபோது அதில் பயணித்துக்கொண்டிருந் தவர்களில் வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்தவரான சந்நிதி ரவிக்குமார் (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தர் வானின் அடியில் சிக்கி உடல் நசுங்கி உயிரிழந்தார். இவருக்கு 4 மாதங்களின் முன்பே திருமணம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

ஆர்.ஜாபனா (வயது 21) வரணி, செ.சதிஸ்குமார் (வயது 24) மிருசுவில், சி.கணபதிப்பிள்ளை (வயது 62), மத்தொனி, ஆர்.ஜெயந்தியா (வயது 31) வரணி, ஆர்.ராஜேஸ்வரி (வயது 30) கொடிகாமம், ஆர்.ஆனந்த புஸ்பம (வயது 47 - தும்பளை), க.புவனேஸ்வரி (வயது 50) மிருசுவில், சி.பாக்கியம் (வயது 70), வரணி, எஸ்.செல்வராணி (வயது 51) பருத்தித்துறை.

நெல்லியடிப் பொலீஸார் இந்த விபத்துத் தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, விபத்தையடுத்து தலைமறைவான தட்டிவான் சாரதி ரஞ்சன் நேற்று மாலை பொலீஸாரிடம் சரணடைந்தார்.

(ஒ-3-15-70-117-173-ரி)

## மகாவலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னும், ஜே.வி.பியினர் தாம் மகாவலி அதிகார சபையைத் தவிர வேறு எந்த நிறுவனத்தையும் பொறுப்பேற்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்பீடம் அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவசர அவசரமாகக் கூடி இந்தச சர்ச்சை பற்றி ஆராய்ந்தது.

ஜே.வி.பியின் உயர்பீடம் சோமவன்ச அமரசிங்க தலைமையில் நேற்றுக்கூடியது. இறுதி முடிவுகள் பற்றி எதுவும் வெளியிடப்படவில்லை. (க)

## கிங்ஸ்லியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் பொருளாளரான அரியநேந்திரன் கொக்கட்டிச்சோலை ஆலயத்தின் நம்பிக்கையாளருமாவார்.

இவர் நாடாளுமன்ற உறுப்பினராகும் பட்சத்தில் இம்மாவட்டத்தில் இரு ஊடகவியலாளர்கள் 13ஆவது நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாக இருப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. ஊடகவியலாளர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராய் தெரிவாகியுள்ளமை தெரிந்ததே. (க)

## விவசாய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படும் வேலைத்திட்டங்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

அத்துடன் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக நேற்று யாழ்.செயலகத்தில் அத்துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடலையும் இக்குழுவினர் மேற்கொண்டனர்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நியாப் திட்டப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன், யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் க.சின்னத்துரை, அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதி விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(ஒ-5)

## தமிழ்க் கூட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய பங்காற்றுவார்.

அத்தோடு, புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.

இன்றைய சந்திப்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது நடைபெறவுள்ள சபா நாயகர் தெரிவில் கூட்டமைப்பு எம்.பிக்கள் எப்படி நடந்துகொள்வது என்பது பற்றியும் முடிவு எடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

அது தவிர, 22 எம்.பிக்கள் பலம் கொண்ட தமிழ்க்கூட்டமைப்பு, தமிழ் மக்களின் நலனுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்து ஆலோசித்து வியூகங்கள் வகுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கலந்துரையாடலின் விவரங்களை அறிவிப்பதற்காக இன்று மாலை 4 மணிக்கு கிளிநொச்சியில் செய்தியாளர் மாநாடு ஒன்றும் நடைபெறவிருக்கின்றது.

## அன்னை பூபதி நினைவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்கள் இடம்பெற்றன.

யாழ்.கிட்டுப் பூங்காவில் முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப்பேரவை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரினை தேசிய எழுச்சிப் பேரவைச்செயலாளர் சூ.சிறில், சர்வதேச மாணவர் பேரவைப்பிரதிநிதி குகன், யாழ்.பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.செழியன், நல்லூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ம.திருமாறன், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் கு.சண்முகசுந்தரம், வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் சாம்பசிவம், யாழ்.நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் உபசெயலாளர் சிவஞானசுந்தரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்து தியாகதீபம அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை மேஜர் நிறைஞ்சனின் தந்தை க.தம்பிராசா ஏற்றி வைததார். மலர்மாலையினை வீரவேங்கை அமிர்தமதியின் தந்தை கோபாலகிருஷ்ணன், தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தேசியபட்டியல் உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் ஆகியோர் அணிவித்தனர்.

மலர்அஞ்சலி நிகழ்வை யாழ்.நலலூர்க் கோட்ட முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உண்ணா நோன்பு நிகழ்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆரம்பித்துவைத்தார்.

### வடமராட்சியில்....

வடமராட்சியில் கரவெட்டி மூத்த விநாயகர் ஆலய முன்றிலில் (பொன்னம்பல வித்தியாலய ஆசிரியர்) எஸ்.இந்திரன் தலைமையில் உண்ணா நோன்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பொதுச்சுடரை உடுப்பிட்டி பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் வனிதனும் தேசியக் கொடியை கரவெட்டிப் பிரதேசப் பொறுப்பாளர் கருணாவும் ஈகச்சுடரினை மாவிரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் தமிழரசனும் ஏற்றிவைத்தனர்.

அதனைத்தொடர்ந்து போராளிகளும் பொதுமக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் உள்ளூர்ப் பிரமுகர்கள் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர்.

பிற்பகல் 3.00 மணியளவில் உண்ணாவிரதிகளுக்கு குளிர்பானம் வழங்கி உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது.

### தென்மராட்சியில்..

தென்மராட்சிக்கோட்ட உண்ணா நோன்பு நிகழ்வு காலை 9.00 மணிக்கு சங்கத்தானை முருகன் கோவில் வீதியில் நடைபெற்றது. தென்மராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் அரசண்ணா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தென்மராட்சி எழுச்சிப்பேரவைச் செயலாளர் க.சந்திரசேகராவும் தேசியக் கொடியை தென்மராட்சிக் கோட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி அன்புவும், அன்னையின் திருவுருவப் படத்திற்கான சுடரை தென்மராட்சி பிரதேச பதிவுகாரர் க.மோகனராஜலிங்கமும் ஏற்றி வைத்தனர். உருவப்படத்திற்கான மலர்மாலையை தென்மராட்சி பிரதேச அரசியல் பொறுப்பாளர் கலைவாணன் சூட்டினார்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா நினைவுரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுகளில் அந்தந்தப் பகுதிகளைச்சேர்ந்த மாணவர்கள், பொதுமக்கள், போராளிகள் என பல்வேறு தரப்பினரும் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.

(ஒ-3-6-30-70-86-117-139)


இதோ! வெளிவந்துவிட்டது!!

யாழ்.மத்திய கல்லூரி தமிழ்நூல் வெளியீட்டுப்பிரிவு வெளியிடும்
திரு.நாக.தமிழிந்திரன் அவர்களின்

திருவடி சூட்டுப்படலம் - வினாவிடைத் தொகுப்பு

★க.பொ.த (உயர்)தரம் பரீட்சையை நோக்கிய தமிழ்கற்கும் மாணவருக்கு ஓர் அரிய வாய்ப்பு.
★மாணவர்களின் நீண்டகால எதிர்பார்ப்பிற்கு ஒரு வரப்பிரசாதம்.



கிடைக்குமிடங்கள்:-
- யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
- பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
- ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்
- துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
- துர்க்கை அம்பாள் புத்தகசாலை - தனங்களப்பு வீதி. சாவகச்சேரி
- சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை - நெல்லியடி
- அறிவமுது புத்தகசாலை - வன்னி (ஏழு கிளைகள்)
- BEACON TUITION- யாழ்ப்பாணம்.

தமிழ் வெளியீட்டுப்பிரிவு,
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
(31029)(38-13-36)



மரண அறிவித்தல்

செபமாலை சூசைப்பிள்ளை

(பிரபல புடைவை வியாபாரி)

பலாலியைப் பிறப்பிடமாகவும் (புனித செபஸ்தியார் ஆலயம்) சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை சூசைப்பிள்ளை நேற்று (19.04.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல், நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியின் பின் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி (ஜோசப்),
பிள்ளைகள்.

புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம். (31085)(36-12)



GROUP CLASSES
2005 2006
CHEMISTRY
By .DIAS B.Sc. (Hons.)
COM.MATHS
By. M. SRI B.Sc.
104/4, CROSS Rd., ATHIYADY
(30925)(38-13-36)



A/L LOGIC
இறுதிக் கருத்தரங்கு
ஆசிரியர்: எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம் : 26.04.2004
திங்கள் 9 மணி
(தொடர்ச்சியாக 6 நாள்கள் நடைபெறும்)
★ அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும்.
பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளுங்கள்.
(31068)(13-36)
BEACON யாழ்நகா






அதிரடி வெளியீடு

A/L 2004ல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிற்கான

GENERAL ENGLISH

முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாத்தாள் விடைகளுடன்

Past Papers (2001, 2002, 2003) With Answers

தொகுப்பு: த. தனேந்திரன்
B.COM. (Hons). M.M.SPI, H.N. Dip-In Acc.
P.G.Dip.In.Edu.
பகுதிநேர விரிவுரையாளர் (ஆங்கிலம்)
தொழில்நுட்பக் கல்லூரி. யாழ்.

கிடைக்கும் இடங்கள்:
பூபாலசிங்கம், சுப்பிரமணிய, சிறிலங்கா, துர்க்கா (சுன்னாகம்), சிதம்பரப்பிள்ளை, பிரியங்கா, அறிவமுது, கவிதா (வவுனியா)



வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச செயலக புதிய கட்டட
அடிக்கல் நாட்டுவிழா

பிரதம விருந்தினர்
திருமிகு. செ.பத்மநாதன் அவர்கள்
அரசாங்க அதிபர்-யாழ்ப்பாணம்.

தலைவர் : திரு.க.கனகரத்தினம்
பிரதேசசெயலர் கரவெட்டி.

காலம் : நாளை(21.04.2004)புதன்கிழமை.
மு.ப.10.11 மணி தொடக்கம் 11.32 வரை.

இடம் : நாவலர் மடம், கரணவாய் மத்தி, கரவெட்டி.

அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
கரவெட்டி. (C/34557)(36-13)

பிரதேசசெயலர்,
உத்தியோகத்தர்கள்,
காணிக்கொள்வனவுச் சபை.



MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
யாழ் நகரில் முதன் முதலாக
Microsoft Exams
MCP MCSE MCSA
மைக்கிரோசொவ்ற் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சை,
மைக்கிரோசொவ்ற் நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழ்
மேலதிக விபரங்களிற்கு 23-04-2004 இற்கு முன் நேரில்:
-MCS, 324, Palaly Road, Jaffna.(1st floor)
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.